சிவாஜி

தமிழ் நாட்டு "இட்லி"க்கு பம்பாய் பத்திரிகையுலகில் கிராக்கி

பம்பாய் பத்திரிகையுலகில் கொஞ்சகாலமாக தமிழ் நாட்டு ஏகபோக உரிமைகளான இட்லிக்கும், தோசைக்கும் ஏராளமான கிராக்கி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படி திடீரென்று பம்பாய் வட்டாரத்தில் தோன்றியிருக்கும் மாறுதலின் மர்மம் என்ன என்பது தீவிர ஆராய்ச்சியின் மூலமாகத்தான் புலப்படமுடியும்.

பம்பாயில் தமிழர்கள் ஏராளமாக இருக்கிறார்களென்பதற்கும் இந்த மாறுதலுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டோவென்றால் அப்படியொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை பம்பாய்த் தமிழர்கள் தங்கள் இட்லிகளையும், தோசைகளையும் விட்டுக்கொடுக்காமல் பாதுகாத்து வரப்போதுமான நல்ல சூழ்நிலை அங்கு நிலவுகிறதா என்பது குமரிமுனைக்கு அருகாமையிலுள்ள நமக்கு அவ்வளவு தெளிவாகப் புலப்படவில்லை.

பம்பாயில் 'இட்லி', 'தோசை' கிராக்கி ஏற்பட்டிருப்பது எழுத்து ரூபமாகத்தான் என்பதை வாசகர்களுக்கு முதலிலேயே கூறிவிட விரும்புகிறோம்.

பம்பாய்ப் பத்திரிகைகளில் 'பத்திரிகை தர்மமும்', 'எழுத்துத்தரமும்' ரொம்ப ரொம்ப அதிகமாக உயர்ந்து விட்டதன் காரணமாக 'இட்லி' 'தோசை' என்ற பதங்கள் அதிகமாக அடிபட ஆரம்பித்திருக்கின்றன. அதுவும் இந்த சொற்கள் ஆங்கிலப் பத்திரிகைகளில் ஆங்கில வரிவடிவில் அடிபடுகின்றன என்பதுதான் ரொம்பவேடிக்கை. பம்பாயிலிருந்து 'பிளிட்ஸ்' என்றொரு ஆங்கில வாரப்பத்திரிகை வெளிவருகிறது. இந்தப்பத்திரிகைக்கே 'இட்லி ஜர்னலிஸம்', 'தோசை ஜர்னலிஸம்' போன்ற பதங்களைப் பிரயோகித்த பெருமை சேருகிறது.

இவ்வாறு 'பிளிட்ஸ்' பத்திரிகை குறிப்பிடும் இட்லி, தோசை பத்திரிகை முறைகள் யாரைச்சார்ந்திருக்கின்றன என்ற உண்மையை அதே நகரில் வெளியாகும் 'காஞ்ச்' என்ற ஆங்கில வாரப்பத்திரிகை மூலம் நாம் ஊகிக்க முடிந்தது.

'பிளிட்ஸ்' பத்திரிகை 'காஞ்ச்' பத்திரிகையைத்தாக்கி எழுதி அதன் பத்திரிகைக் கொள்கைகளை இட்லி, தோசை என்ற அனுகுணங்கள் சூட்டி அழைத்திருக்கிறது. இந்தத்தாக்குதல்களில் டி. எப். காராகாஎன்ற பிரபலபத்திரிகைக்காரது 'மார்ச்' என்ற பத்திரிகையும் தீவிரமாகக் கலந்து கொள்வதாகத் தெரிகிறது.

பிளிட்ஸ் பத்திரிகையும், மார்ச் இதழும் சோஷியலிஸ்டு அபிப்ராயங்களை ஆதரிக்கும் நோக்குடன் இந்திய அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்து பலமாகத் தாக்கி எழுதுகின்றன என்று பெயர்.

'காஞ்ச்' பத்திரிகை இவற்றை எதிர்த்து பண்டித நேருபோன்ற தலைவர்களது கௌரவத்தைப் பாதுகாக்க ஊக்கம் காட்டுகிறது.

இத்தகைய தீவிர கொள்கை வேறுபாடுகளிடையே அகில இந்தியபத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டுத் தலைவரான தேவதாஸ் காந்தியின் (மகாத்மாவின் புதல்வர்) பத்திரிகைத் திறமைபற்றியும். அறிவாற்றல் பற்றியும் தீவிர சச்சரவு வேறு இந்த பம்பாய்ப் பத்திரிகை யுலகில் தோன்றியிருக்கிறது.

வட இந்தியாவில் நடக்கும் பத்திரிகைகளில் பெரும்பாலும் முக்கிய ஸ்தானங்கள் வகித்து வருபவர்கள் தமிழர்களே என்பதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக்கொள்வது நலம்.

இந்தத் தமிழர்களது பத்திரிகை அனுபவமும், திறனும் வட நாட்டுப்பத்திரிகை வட்டாரங்களில் பிரசித்தி பெற்றிருக்கின்றன.

தோசை ஜர்னலிஸம், இட்லித்தனம்போன்ற அடைமொழிகளை உபயோகிக்கும் 'பிளிட்ஸ்' தாளில் இந்தப் பதங்கள் உபயோகிக்கக் கருவியாயிருப்பவர்கள் தமிழர்களே என்பதை அறியும்போது நமக்கு வெட்கமாயிருக்கிறது.

இந்தியாவில் பத்திரிகை தர்மத்தை நிலைநாட்டி, பத்திரிகைத் தரத்தைச் சிறப்புறச் செய்து உலக நிலைக்கு சமதையாகக் கொண்டுவந்த பெருமையைப் படைத்திருக்கும் தமிழர்கள் இவ்வாறு மஞ்சட் பத்திரிகைத் தனத்துக்குக் கைக் கருவிகளாக இயங்கி வருவது நமக்கு வருத்தமூட்டுகிறது.

பம்பாய்ப் பத்திரிகை யுலகில் தோன்றியிருக்கும் இந்த மஞ்சள் காமாலை உடனே ஒழிந்து பொறுப்புள்ள பத்திரிகை தர்மம் திரும்பவும் நிலைநாட்டப்பட அங்கு செங்கோல் செலுத்தும் பத்திரிகைக் தமிழர்கள் உடனே உறுதிகொள்ள வேண்டும். லட்சியங்களை மறந்துவிட்டு கொள்கை வேறுபாடுகளின் பெயரால் கீழ்த்தரமான சொந்தப் போராட்டங்களை நடத்துவது ரொம்ப அவிவேகம். பிளிட்ஸ் பத்திரிகையின் தரத்தை 'காஞ்ச்' பத்திரிகை 'பூரி மஸால் ஜர்னலிஸம்' என்று கூறினால் எப்படியிருக்கும்?

இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகளினின்று பம்பாய்ப் பத்திரிகை யுலகம் விரைவில் மீட்சியுற வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.



வைர மலர்

மேலே காட்சியளிக்கும் ஜாலம் பொருந்தியமலர் உண்மையில்மலரல்ல. சிங்காரச் செருக்கு நிறைந்த ஒரு வைர 'ப்ரூச்'. இவ்வைர மலரை மலர வைக்கும் அரும் பணியில் பச்சை, மஞ்சள், சிகப்பு தங்க வகைகள் சேர்ந்திருக்கின்றன. பிரிட்டனில் விரைவில் நடைபெறவிருக்கும் லண்டன் தொழிற் காட்சியில் இது வைக்கப்படவிருக்கிறது.

இதழ் விரித்துப் பொங்கி நிற்கும் இவ்வைர மலரின் வாய்ப்பு, இது இயற்கையின் செறிவில் மலர்ந்த நறுமலரோ என்று நம்மை வியப்புறச்செய்வதுடன் இதன் நறுமணத்தின் சாயலையும் முகர்ந்தறிய வேண்டுமென்ற அவாவை நமக்கு உண்டாக்குகிறதல்லவா?

6-2-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

பத்தாம் அத்தியாயம்

குருவும் சீடனும்

ஷாஹஜி தன் மைந்தனை பீஜபுரியை விட்டு அனுப்பிவிட்டதன்மூலம் தமக்கு அவனால் நேரக்கூடிய ஆபத்து அகன்றுவிட்டது என்று நினைத்தார். உண்மையில் அவருக்கு அவன்மூலம் நேரக்கூடிய கெட்ட பெயர் அப்போதைக்கு அகன்றுவிட்டதென்னவோ உண்மைதான்.

சிவாஜி அகன்றதில் ஷாஹஜிக்கு இருந்த திருப்தியைவிட பீஜபுரி சுல்தானுக்கு அதிக திருப்தியாகத்தான் இருந்தது. வடக்கே ராஜ்யத்தின் ஏதோ ஒரு மூலையில் இருக்கும் குறும்புச் சிறுவனது நடவடிக்கைகள் இனி தம்மை ஒரு தொந்தரையும் செய்யாது என்ற தேர்தல் சுல்தானுக்குத் தோன்றியதில் வியப்பில்லை.

சிவாஜி இவ்வாறு எட்டாக் கையில் அகன்றிருப்பதன் மூலம் அவனுக்கு நேர்ந்திருந்த சுதந்திரம் பிற்காலத்தில் பூதாகாரமாக வளர்ந்து தனக்கே உலைவைக்கப் போகிறது என்பதை அவர் அப்போது கற்பனையிலும் நினைக்கவில்லை.

சிறுவன் சிவாஜியும் அவன் தாய் ஜீஜாவும் பூனா என்று அழைக்கப்படும் தந்தையின் வடகோடி மான்யப் பிராந்தியத்தை அடைந்தபோது அவ்விடம் கிட்டத்தட்டப் பாழடைந்த பிணக் காடாகவும், சூன்ய பூமியாகவும்தான் இருந்தது. அத்தகைய சூன்ய பூமியில் சிவாஜியும், அவன் தாயும் சாதாரண வாழ்க்கை வசதிகள் தேடிக் கொள்வதே அசாத்தியமென்று தோன்றும் அளவில்தான் இருந்தது.

இருமுறை சைன்யங்கள் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து அழித்து அந்தப் பிராந்தியம் பொட்டலாகி விட்டிருந்தது. கிராமங்களெல்லாம் வீடுகள் இடிந்து, மக்கள் வாசமின்றி பாழ்பட்டுக் கிடந்தன. நிலங்களில் களை வளர்ந்து கோரமாக மூடிக்கிடந்தது. அவற்றைக் கவனிக்க அங்கெல்லாம் யாருமில்லை. சாகுபடிபோன்ற சமாதானமான உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டிருந்த குடியானவர்கள் பலர் வாழ்க்கை வசதியின்மையால் கொள்ளையடிக்கும் கூட்டத்தாராக மாறி கோர வாழ்வு நடத்திவந்தார்கள். இதற்கிடையில் கொடிய பஞ்சமொன்று தோன்றி அந்தப் பிராந்தியத்தையே பிடுங்கித் தின்றிருந்தது.

மனிதர் உலவிய இடத்தில் ஓநாய்களும், வேறு சில கொடிய விலங்குகளும் தலை தெறிக்கக் கேட்பாரின்றி நடமாடிவந்தன.

இத்தகைய பரிதாபகரமான சூழ்நிலையில் சிவாஜியும் அன்னை ஜீஜாவும் அந்தப் பிராந்தியத்தையடைந்தார்கள். அப்போது சிவாஜிக்கு வயது பதின்மூன்றுதான்.

இத்தகைய துன்ப சூழ்நிலைக்கிடையிலும் களிப்பூட்டத்தக்க ஒரு சம்பவம் நேர்ந்தது. இதற்கு ஷாஹஜியே காரணமாயிருந்தாரென்பது வியப்புறச் செய்வதாகத்தான் இருக்கிறது.

ஷாஹஜி சிவாஜியை வடக்கே அனுப்பிய கையோடு தமது மான்யப் பிரதேசத்தில் வசித்து வந்த தாதாஜி கொண்டதேவர் என்ற அறிஞருக்குக் கடிமொன்றும் அனுப்பியிருந்தார்.

சிவாஜியும் ஜீஜாவும் வடக்கே சென்று சேர்ந்தபோது தாதாஜி கொண்டதேவர் அவர்களை அன்புடன் வரவேற்று அவர்கள் வாசம் செய்யத் தாம் இருந்த விடுதியில் தனியிடம் சமைத்துக் கொடுத்தார்.

தாதாஜி கொண்டதேவர் பேரறிஞர் என்பதுடன் மகத்தான குருவாகவும் இருந்தார். அவரது கல்விப் புலமையும், வடமொழிப் பாண்டியத்யமும், பண்டைய நூல்களில் அவருக்கிருந்த தொடர்பும் அபாரமானவை.

சிவாஜி அவரை முதலில் சந்தித்தபொழுதே அவரிடம் தன்னையறியாமல் ஒரு அன்பும், மரியாதையும் தன்னுள் எழுவதை உணர்ந்தான். அவரது விசாலமான நெற்றியும், நீண்ட அழகிய கூர்மையான நாசியும், வயதும் அவனை ஆட்கொண்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது எளிமையும், தூய்மையும் அவனை நிரம்பவும் கவர்ந்தன.

தாதாஜி, இளைஞன் சிவாஜியைத் தமது சீடனாகமாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு பெரிய மகாராஜாவை ராஜகுரு ஏற்பதுபோலவும் ஏற்று அவனது நலனையே தன்னலமாகக் கருதிப் பணியாற்ற விழைந்தார். சிவாஜியின் புது மலர்ச்சிக்கும், அமோக வளர்ச்சிக்கும் இங்ஙனம் பயனுடைய வித்து ஊன்றப்பட்டது.

தாதாஜி ஒரு பேராசிரியராகவும், உயர்ந்த குருவாகவும், ஞானியாகவும் மாத்திரம் இருக்கவில்லை. ஒரு மகத்தான நிர்வாகத் திறனும் படைத்திருந்தார்.

சூன்யமடைந்திருந்த அந்த பிராந்தியத்தை திரும்பவும் செழுமையுறச் செய்யவும், சுற்றுப்புறத்து மக்களை ஒழுங்கான வாழ்க்கைக்கு உட்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டார்.

முதன் முதலாக அவர், வீரம் செறிந்த மலைவாசிகள் கூட்டத்தாரை வரவழைத்து அவர்களுக்குத் தம் சொந்தச் செலவில் பரிசுகள் வழங்கி நாட்டைப் பீடித்து மக்களை பயமுறுத்தி வந்த ஓநாய்க் கூட்டத்தை அடியோடு அழித்தார்.

பிறகு கொள்ளையால் வாழ்வு நடத்திய அம் மலைவாசிகளது மனத்தை மாற்றி உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை என்று வற்புறுத்தி மிகவும் குறைவான குத்தகைக்கு அவர்களிடம் நிலங்களைப் பிரித்துக்கொடுத்துப் பயிரிடும் வேலையைத் துவக்கிவைத்தார்.

இவ்வாறு வெகு விரைவில் அந்த பிரதேசத்தில் செழுமையின் ஒளியும், ஒழுங்கின் அழகும் தோன்ற ஆரம்பித்தன. இங்ஙனம் சீர்திருத்தப்பட்ட எண்ணற்ற வீரர்கள் தாதாஜியின் அன்பு கொண்ட அடிமைகளாயினர். அவரைத் தம் கடவுள் போல் மதிக்க ஆரம்பித்தனர்.

மேலும் தாதாஜி அந்த வீரர் குலத்தினின்று திறமையுடைய பலரைப் பொறுக்கியெடுத்து சிறு சேனையொன்றை நிறுவியதுடன் அவர்களுக்கு ஒழுங்கான பயிற்சியும், ஊதியமும் கிடைக்கச் செய்தார்.

இவ்வாறாகப் பாழடைந்த அந்த சூன்ய பிணக்காட்டில் பசுமையும், இனிய வீடுகளும் தோன்றின. அழிந்து இடிந்திருந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுத் தொழுகையும் துவங்கிற்று.

சிவாஜியின் வசமிருந்த கிராமங்களில் முக்கியமானது பூனா கிராமம். அதன் இடையே மூதா என்ற சிறு நதியொன்று தன் தெள்ளிய நீரைச் சுமந்து நகர்ந்துகொண்டிருந்தது. தாதாஜியின் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பூனாவும் பசுமை படர்ந்த பொன்னகரமாக உருப்பெற்று வளர்ச்சியுற ஆரம்பித்தது. பொன்னேர் பூட்டிப் புனித தினத்தில் பூனா நிலங்களை உழ ஆரம்பித்து வைத்துப் பொலிவான வருங்காலத்துக்கு வரவேற்புக் கூறினார் தாதாஜி. பூனா கோயில்களையும் சீரமைத்தார்.

பூனாவிலேயே நதிக்கரையில் அரண்மனை போன்றதொரு மாளிகையை சிவாஜியின் வாசத்துக்காகச் சமைத்துக் கொடுத்தார் தாதாஜி.

இவ்வாறு சீர்திருத்தங்களை ஆரம்பித்து வைத்துவிட்டு தாதாஜி சிவாஜியின் கல்வியை கவனிக்க ஆரம்பித்தார். சுவடிகள் அவரது கரங்களில் மலர்ந்து நின்று சிவாஜியின் இதயத்துள் அறிவொளி ஏற்ற ஆரம்பித்தன. முன்னைப் பழமையில் தர்மம் தழைத்திருந்த விந்தையை வெற்றிக் களிப்புடன் சீடனுக்கு எடுத்துரைத்தார் குரு. பார்த்தனும், கண்ணனும் வீரமும், லீலையும் புரிந்த தொன்மையைச் சித்தரித்துக் காட்டினார். சுக்ல பட்சத்து நிலவு போன்று சிவாஜியின் உடலும், உள்ளமும் போட்டியிட்டுப் பொலிவு பெற ஆரம்பித்தன.

அதிகாலையில் துயிலினின்று எழுந்தவுடன் தீவிரமான தேகப் பயிற்சியில் ஈடுபடுவான் சிவாஜி. பின்னர் தோட்டப் புறத்தில் சிறிது நேரம் கழித்துவிட்டுக் குதிரைமேலேறி மலைவாரங்களைச் சார்ந்திருந்த காடுகளினூடே தனது மலை வீரர்கள் பலருடன் சுற்றித் திரிவான். வெகு விரைவில் அந்த மலைப் பிராந்தியங்களின் ரகசியங்களத்தனையும் அவன் வசப்பட்டுவிட்டன. இவ்வாறு அலைந்து திரிந்துவிட்டுக் கதிரவனது மாலைப் பொற்கிரணங்கள் விடுதலை பெறும் தருணத்தில் பூனாவுக்குத் திரும்பித் தன் மாளிகையை அடைவான். அன்னைக்கு மரியாதை செலுத்தி அவளது ஆசியைப் பெற்ற பின் மோகன மணிவிளக்கின் முன்னர் தனது எளிய உணவை இனிய தலைவாழை இலையில் உண்பான்.

உண்டி முடிந்தபின் தாதாஜியுடன் தாழ்வாரத்தில் வந்தமர்ந்துகொண்டு அடக்க ஒடுக்கத்துடன் குருவின் போதனைகளைக் கேட்டுக் கல்வி பயில்வான். மெல்லிய தென்றலில் துடிக்கும் திருவிளக்கினொளியில் குருவும் சீடனும் லட்சிய உள்ள நிலையெய்தி மனமொன்றிக் காலம் கழிப்பர்.

இவ்வாறு சில ஆண்டுகள் கடந்தன.

—

(தொடரும்)

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ

பிராஞ்சு :— “பாபு ஹால்” சைனாபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers & பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

உண்மையொளி

என்னைப் போன்று நூற்றுக் கணக்கானபேர்கள் மடிந்தாலும் பரவாயில்லை; உண்மை நிலவ வேண்டும். உண்மையின் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து நாம் எப்போதும் ஒரு மயிரிழை கூட வழுவிவிடக் கூடாது.

— மகாத்மா காந்தி

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை 14	திருச்சி, 6—2—49 சர்வதாரி-ஞு தை-மீ, 24-உ	முற்றுகை 10

சுயராஜ்யம்

உண்மையான சுயராஜ்யம் நம்மில் ஒருசிலர் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டதனால் மாத்திரமே வந்துவிடாது. இப்படிக் கைப்பற்றிவிட்டவர்கள் தம் அதிகாரத்தை துஷணை செய்யும்போது அதை எதிர்க்கத் திரளும் சக்தியின் மூலமே நமக்குக் கிடைக்கும்.

— மகாத்மா காந்தி

பர்மாவில் இந்தியர் நலவுரிமைகள்

பர்மாவில் இந்தியர் நலவுரிமைகள் பிரச்னை தீவிர உருவெடுத்திருப்பதன் பலனாக இம்மாத மத்தியில் காங்கிரஸ் ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமையாவின் தலைமையில் பர்மிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த ஒரு தூது கோஷ்டி பர்மா செல்லவிருக்கிறது. இத்தூது கோஷ்டியின் வேலைகள் பற்றியும், பர்மாவில் இந்தியருக்குத் தற்போது இருந்துவரும் நலவுரிமைகள் பற்றியும், இவற்றிற்கு விரைவில் நேரவிருக்கும் பாதகங்கள் பற்றியும், பர்மியர் இந்தியரிடம் காட்டிவரும் மனப்பான்மை பற்றியும் புள்ளிவிவரங்களும் ரஸமான தகவல்களும் 'நில்கன் பெருமாள்' சென்னை 'ப்ரீ இந்தியா' ஆங்கில வாரப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அவற்றில் சிலவற்றையும், நமது கருத்துக்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

இந்தியர் நலவுரிமை

பர்மாவில் இந்தியர் நலவுரிமைப் பிரச்னை பர்மா சுதந்திரம் பெற்ற பின்னர் தோன்றிய பிரச்னையாகும். பர்மாவில் பர்மியர் நலன்களுக்கு வெளியாரால் இருந்துவரும் தடைகளைப் போக்குவதும், புதிய பொருளாதார அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துவதும் பர்மிய சுதந்திர அரசாங்கத்தின் முக்கிய வேலையாகத் தோன்றியபோதுதான் இந்த பிரச்னையும் எழுந்தது.

பர்மாவில் பர்மியர் நலன்களைக் கவனிக்கும் நோக்கம் ஏற்பட்டிருப்பதை நாம் ஒரு விதத்திலும் தடை செய்யவோ, குற்றம் சொல்லவோ முடியாதெனினும் இந்த நடவடிக்கையால் பாதிக்கப்படவிருக்கும் இந்தியர் உரிமைகளைப் பற்றியும் அக்கறை எடுத்துக் கொள்ளாமலிருக்க முடியாது.

பர்மா செல்லவிருக்கும் பட்டாபி தூது கோஷ்டியினர் முன்னே மூன்று முக்கிய விஷயங்கள் விரிந்து நிற்கின்றன.

முதல் பிரச்னை பர்மாவில் இந்தியர்களுடைய முதலீடு சம்பந்தமானது. இரண்டாவது பர்மாவில் இந்தியர் பிரஜாவுரிமை பற்றியது. மூன்றாவது பர்மிய அரசாங்கத்தில் ஊழியம் புரியும் இந்தியர் நிலை பற்றியது.

இந்தியர் முதலீடு

பர்மாவில் ஏராளமான மூலதனத்தை ஈடுபடுத்தியிருக்கும் இந்தியர்கள் தற்போது நிரம்பவும் கவலையுற்றிருக்கிறார்கள். முக்கியமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களது கவலை ரொம்ப அதிகமானது.

சென்ற ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்குமேலாக நாட்டுக்கோட்டை செட்டியார்கள் பர்மாவில் வட்டிக்குக் கடன் கொடுத்து சுமார் நூறு ஸ்தாபனங்களின் மூலம் இத்தொழிலைச் செய்து வந்திருக்கிறார்கள்.

மலேயா, இந்தோ-சீனா, சிலோன், பர்மா போன்ற நாடுகளில் இச் செட்டியார்கள் செய்திருக்கும் முதலீடு சுமார் நூற்றிருபது கோடி ரூபாய்களுக்குச் சேரும். இத்தொகையில் பாதிக்கு மேலாகவே பர்மாவில் முடங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது. இது தவிர இவர்கள் வசம் சொந்தமாயிருக்கும் பர்மிய நில விஸ்தீரணம் சில லட்சம் ஏக்கர்கள். தற்போது இவர்களுக்கிருக்கும் பர்மிய முதலீடு சற்றுக் குறைந்திருக்கிறதென்றாலும் கணிசமானது என்பதில் ஐயமில்லை.

நெல் விலை ரொம்பக் குறைவாக விற்றகாலத்தில் (1940-க்கு முந்தைய பன்னிரண்டு ஆண்டுகளில்) பர்மிய விவசாயிகள் இவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்த கடன்களுக்கு பதிலாக நிலங்களை இவர்களது ஸ்வாதீனத்துக்கு மாற்றிவிட்டார்கள். நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு பர்மாவில் நிலம் வாங்குவது கருத்தில் இல்லாமலிருந்தும், வேறு வகையில் தாங்கள் கொடுத்த கடன்கள் திரும்பி வராதபோது நில ரூபத்தில் அவற்றை ஏற்றுக் கொண்டார்கள்.

சென்ற ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, இந்த ஜனவரியில் அமுலுக்கு வந்திருக்கும் பர்மிய நிலங்களை தேசீய மயமாக்கும் சட்டம் இயற்கையாக இந்த செட்டியார்களது உடமையில் இருக்கும் நிலங்களை பாதிக்கிறது. பர்மிய நிலங்களில் இந்தியர் வசமிருக்கும் 40 சதவிகிதத்தில் தமிழ் நாட்டு செட்டியார்களின் பங்கு அதிகமானது.

நஷ்ட ஈடு

பர்மாவில் பர்மிய அரசாங்கம் அமுல் நடத்தும் சட்டங்கள் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லையானாலும், பாதிக்கப்படுவோர் நியாயமான நஷ்டஈடு பெறவேண்டியது நியாயமென்பதை மறுக்கமுடியாது. இதை வற்புறுத்தவேண்டியது இந்திய அரசாங்கத்தின் கடமையாகும்

நஷ்ட ஈடு கொடுக்கும் கொள்கையை பர்மிய அரசாங்கம் ஒப்புக் கொண்டபோதிலும், அதன் விதிகள் நியாயமற்று இருக்கின்றன. பர்மாவில் இந்தியர் வசமிருக்கும் நில புலன்களுக்கு, நிலச்சுவான்தார் ஒரு வருடத்தில் செலுத்தும் நில வரியைப்போல் பன்னிரண்டு மடங்குதான் நஷ்ட ஈடு கொடுக்கப்படுமென்று பர்மிய அரசாங்கம் கூறுகிறது.

மேலும் நிலபுலன்களின் சொந்தக்காரர்கள் அவற்றின் மீது தமக்குள்ள உரிமையை பர்மிய அரசாங்கம் திருப்தியடையுமாறு போதிய தஸ்தவேஜு ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டுமாம். இதில் யாதொரு தவறுமில்லையென்று தோன்றிய போதிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. போர்க்காலத்தில் பல தஸ்தவேஜுகள் காணாமலும், தீக்கிரையாகியும் அழிந்து போயிருக்கின்றன. எனவே வேறு ஆதாரங்களுக்கு பர்மிய அரசாங்கம் கௌரவம் அளிக்கவேண்டிய கடமை இருக்கிறது.

இப்படி கடுமையாக நிபந்தனைகள் கோரப்பட்டு திருப்தியேற்பட்ட பிறகும் உடனடியாய் நஷ்ட ஈடு அளிக்கப்படாதென்று பர்மிய அரசாங்கம் கூறுகிறது. பர்மாவின் விவசாய புனருத்தாரண வேலைகள் வெற்றி கண்ட பிறகே இந்த நஷ்ட ஈடு செலுத்தப்படும்.

பிரஜா உரிமை

வருகிற மே மாதத்திற்குள் பர்மிய பிரஜைகளாக இருக்க விரும்பும் வெளியார் அனைவரும் தங்கள் கருத்தை பர்மிய அசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்துவிட்டால் மாத்திரமே பிரஜா உரிமை கிடைத்துவிடாது. பர்மிய அரசாங்கத்தின் விருப்பத்தை

அவசரக் குறிப்பு

டெல்லி பாலம் விமான நிலையத்துக்கு வந்து ஆகாய விமானம் ஏறிக் கல்கத்தா வழியே பர்மா செல்லவிருந்த பட்டாபி தூதுகோஷ்டியினர் இம்மாத முதல் தேதியன்று எதிர்பாராதமுறையில் நிறுத்தப்பட்டதுடன் தூது கோஷ்டியின் விஜயம் கால வரையறையின்றி ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. கல்கத்தா சென்று இவர்களுடன் சேர்ந்துகொள்ளவிருந்த தூதுகோஷ்டி அங்கத்தினர் தமிழ்நாட்டு ராஷ்டிரபதி காமராஜ் அவர்கள் கல்கத்தாவிலேயே நிறுத்தப்பட்டுத் திரும்பியிருக்கிறார்.

— ஆசிரியர்.

யொட்டியே இவ்வுரிமை வழங்கப்படும். மேலும் இந்த உரிமையைக் கோரும் மனுக்களுக்கு மனு ஒன்றுக்கு முப்பது ரூபாய்கள் வீதம் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

பர்மாவில் நீண்ட காலமாக வசித்துத் தம் வாழ்க்கையை பர்மாவிலேயே பரம்பரையாகக் கழித்து வந்துள்ள இந்தியருக்கு இத்தகைய சட்டங்கள் மிகுந்த மன வருத்தத்தையும், கொடுமையையும் உண்டாக்கியிருக்கின்றன.

ஊழியர்கள்

பர்மிய அரசாங்க உத்தியோகங்களில் பதவி வகித்து வரும் இந்தியர்களும் இந்த பிரஜா உரிமைச் சட்டத்துக்கு உட்பட்டவர்களே. இவர்களில் பிரஜா உரிமை அளிக்கப்படாதவருக்கு வேலை போய்விடுவதுடன், அவருக்கு பென்ஷன் கொடுத்து இவர்களை அனுப்பிவிடுவார்கள்.

இந்த ஊழியர்களது பிரஜா உரிமை விஷயமும், பென்ஷன் விஷயமும் முக்கியமானவை. ஏனெனில் இந்திய அரசாங்கம் இவர்களது நிலை மாற்றத்தால் பாதிக்கப்படும். ஏற்கனவே பெரிய அகதிப் பிரச்னையில் அமிழ்ந்து போயிருக்கும்

(12-ம் பக்கம் பார்க்க.)

அனுபவ ஞானியின் குறிப்புகள்



திருலோக சீதாராம்

லண்டனில் டாக்சியும் சர்வீஸ் பஸ்ஸும்

இங்கிலாந்து போலீஸ்காரனைப் பற்றி அவர் பரவசத்துடன் பாராட்டிக் கூறியபோது அதை மறுக்க வழியில்லை. ஏனெனில் அது அவருடைய அனுபவத்தின் வெளியீடு. என்ன இருந்தாலும் வெளிநாட்டார் நம்மைவிடச் சிறந்தவர்களென்பதை முழுசாக ஒப்புக்கொள்ள தேசியத் தருக்குணர்ச்சிக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருக்கிறது. மற்றவர்களைவிட நாம் தாழ்ந்திருக்கிறோமென்பதை ஒப்புக்கொண்டுவிட மனம் வரவில்லை. நான் கேட்டேன்;

“அப்படியானால் நம்முடைய நாட்டுப் போலீஸ் இலாகா சுத்த மோசம் என்று கூறுகிறீர்களா?” என்று. அவர் சொன்னார்:—

“நான் கூறுவதை நன்கு புரிந்துகொள்ளவேண்டும். விஷயம் இதுதான். ஓரிருபேர் ஒழுங்கீனமுள்ளவர்கள் இங்கிலாந்திலும் கூட இருக்கக்கூடும். ஆனால் நம்முடைய நாட்டில் யோக்யர்களாக இருக்கும் அதிகாரிகள் மிகமிகக் குறைந்தவர்கள் என்பதைத்தான் நான் எடுத்துக் காட்டுகிறேன். அப்படி ஒருசிலர் நல்லவர்கள் இருந்தும் கூட அவர்கள் தங்கள் வர்க்கத்தைச் சீர்திருத்த உண்மையாகப் பாடுபட்டாலும்கூட அது கடலில் கரைத்த பெருங்காயமாகவோ விழலுக்கிறைத்த நீராகவோ ஆகிவிடுகிறது. பொதுவாகவே நல்ல அடிப்படையில் பயிற்சி தரவேண்டும் சமூக ஊழியர்களுக்கு.”

நாயுடு கூறியது முற்றிலும் உண்மைதான். ஆறாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து ஆட்சி புரியும் எஜமானர்களின் நல்ல பிள்ளைகளாக இங்கு இருந்து ராஜாங்கம் நடத்தும் பொருட்டு நம்மவர்களே இந்த நாட்டு மக்களை அடக்கியாளப் பழகியிருக்கிறார்களேயன்றி தேச மக்களின் சேவைக்குத் தங்கள் பணியை ஈடுபடுத்திக்கொள்ளும் அளவுக்குப் படித்துக்கொள்ளவில்லை. நல்ல மனிதர்கள் சிலர் நடுநடுவே இருந்தாலும் அவர்கள் முழு யந்திரத்தையும் மாற்றியமைக்கும் திறம் பெற்றிருக்கவில்லை. இப்போதுதான் சுதந்திரம் வந்திருப்பதால் போகப் போகத்தான் இது மாறும்போலும்!

சட்டத்திற்கும் அமைதிக்கும் பாதுகாவலாயிருக்கும் போலீஸ் காரர்கள் முதலில் ஒழுக்கத்தை நடத்திக்காட்டுவது மிகவும் அவசியம். இங்கிலாந்து போலீஸ் இலாகா இத்தகைய பண்பைப் பெற்றிருப்பதனால்தான் அதன் திறமை உலகப் புகழ்பெற்றிருக்கிறது. சமூகத்திலும் அங்கு உயர்ந்த நாகரீகம் வளர்ச்சியுற்றிருக்கிறது.

நம்முடைய கிராமாந்திரப் பிரதேசங்களிலும் நகரங்களிலும் கூட, பணத்தை வாங்கிப் பையில் போட்டுக்கொண்டு டிக்கட் கொடுக்காமல் இருந்துவிடும் பஸ் கண்டக்டர்களை நான் பார்த்திருக்கிறேன். இந்தமாதிரி இனங்களில் கிடைக்கும் தொகையைப் பஸ் சிப்பந்திகள் விகிதாசாரமிட்டு எடுத்துக்கொள்வார்கள் போலும்! ஒருவேளை போதிய ஊதியம் கிடைக்காமையால் இவர்கள் இப்படிச் செய்கிறார்களோ என்று கருதியதுண்டு. சில சந்தர்ப்பங்களில் இந்தக் கொள்ளையில் பஸ் முதலாளிகள்கூடப் பங்கு பெறுவதை அறிந்தபோதுதான் திடுக்கிட்டுப் போனேன்.

திருச்சியிலிருந்து மலைப் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்கு பஸ் போக்குவரத்து உண்டு. துறையூருக்கு பதினான்கணா அல்லது ஒரு ரூபாய் ஒரு ஆளுக்கு டிக்கட் விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத் தேயிலை ரப்பர் தோட்டங்களில் வேலை செய்துவிட்டுத் திரும்பி ஊருக்குச் செல்லும் கூலிகளிடத்தில் பஸ் கண்டக்டர்கள் இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் விகிதம் டிக்கட் வசூலித்து எடுத்துக்கொள்வதையும் பார்த்திருக்கிறேன். அந்த மாதிரி வசூல்கள் நடைபெறும் அக்ரமத்தை பஸ் சொந்தக்காரர்கள் கூட அனுமதிக்கிறார்கள் என்று அறிந்தபோது எனக்குப் புதிதாகவே இருந்தது. நான் சொல்லுவது நான்கு வருடங்களுக்கு முன்பு நேரில் அறிந்த விஷயம். இப்போது ஒருவேளை இது மாறிப்போயிருக்கலாம்.

சென்னையில் டாக்ஸி (வாடகை மோட்டார்) மைலுக்குப் பனிரண்டணா வாடகை விதிக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபக்ஷம் சவாரிக்கு வாடகை ரூ. ஒன்று. ஆனாலும் ஒரு இடத்தில் ஏறி அருகில் உள்ள மற்றொரு இடத்தில் ஒரு ரூபாய் வாடகைகூட கணக்கிட முடியாத தூரத்திற்குச் சென்றாலும் மூன்று ரூபாயாவது வாங்காமல் டாக்ஸி டிரைவர் போவதில்லை. காரணம் பெட்ரோல் கள்ளமார்க்கெட்டில் வாங்க வேண்டியிருப்பதாகச் சொல்கிறார்கள். நாம் தகராறு செய்து போலீஸைக் கூப்பிடுவதாகச் சொன்னால் மண்ணை வாரிவிட்டு சபித்துச் செல்வார்கள்.

சமூகத்தில் பொறுப்புள்ளவர்களிடம் நேர்மை ஏற்பட்டாலன்றி சமூகம் முழுவதும் இப்படி அழுகித்தான் போகும். லண்டனில் ஒரு டாக்ஸி டிரைவரைப்பற்றி நாயுடு அவர்கள் கூறும் அனுபவத்தைக் கேளுங்கள்.

“கோயர் தெருவையும் டாட்டன்ஹாம் கோர்ட் பாதையையும் இணைக்கும் ஒரு சிறு ரோட்டில் (அந்த ரோட்டின் பெயர் இப்போது நினைவில்லை) டாக்ஸி கம்பெனி ஒன்றுக்குச் சென்றேன். அந்த இடத்திற்கும் நான் போய்ச் சேரவேண்டிய கோயர் தெரு 112-நெ. கட்டிடத்திற்கும் சுமார் 100 கெஜ தூரம் தான் இருக்குமென்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அந்த இடத்திற்கு டாக்ஸி வருமா என்று கேட்டு வைத்தேன். இதன்மூலம் நான் அங்கே இடம் தெரியாது அலையும் புதியவன் என்பதை அவன் தெரிந்துகொண்டால் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை சோதித்தறிவதே என் நோக்கம். என்னுடைய அறியாமையைப் பயன்படுத்தி சம்பாதிக்க எண்ணி உடனே டாக்ஸியில் ஏற்றிக்கொண்டு எங்கேயாவது நாலு தெருவுகளைச் சுற்றிவிட்டு அருகிலிருக்கும் அந்த இடத்தில் என்னை இறக்கிவிட்டு வாடகை நிறைய வாங்கிக்கொண்டிருப்பான் என்று தானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. டாக்ஸி டிரைவர் என்னிடம் “நேரே கொஞ்சதூரம் சென்று இடதுபக்கம் திரும்பினால் அங்கேதான் இருக்கிறது நீங்கள் போகவேண்டிய இடம்” என்று கூறினான். நான் விடாமல் “இல்லை, கார் கொண்டுவா. அதில் தான் போகவேண்டும்” என்றேன். அவன் வியப்படைந்தவனாய் “ஏன் நாலடி தாண்டினால் இருக்கும் இடத்திற்கு வாடகைவண்டி எதற்கு? உடல் நலமில்லையா? அப்படியானால் வண்டி கொண்டுவரத் தடையில்லை. அல்லது இடம் தெரியாவிட்டால் நானே நடந்து அழைத்துக் கொண்டுபோய் விடுகிறேன்” என்றான். அதன்படியே அந்தத் தெரு முழுவதும் என்னுடன் நடந்துவந்து நான் குறிப்பிட்ட கட்டிட வாசலில் என்னை விட்டுச் சென்றான். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா அவனுடைய பொறுப்புணர்ச்சியும் சேவை மனப்பான்மையும்?” என்று கேட்டார்.

பதில் சொல்ல விரும்புகிறவர்கள் சென்னைக்குப் புதியவர்களாகவும் இருந்து ரவுண்டானாவிலிருந்து வெலிங்டனுக்கு டாக்ஸியில் போய் நாலரை ரூபாய் கொடுத்துவிட்டு வந்துதான் பதில் சொல்ல வேண்டும். ரவுண்டானாவுக்கும் வெலிங்டன் டாக்கீஸுக்கும் கூப்பிடுதூரமாக இருந்தாலும் நீங்கள் டாக்ஸியில் ஏறி திருவல்லிக்கேணி போய் 13-நெ பஸ்ஸில் மதராஸ் கிளப் வந்து ஜெனரல் பாட்டர்ஸ் ரோட் வழியாக வெலிங்டன் டாக்கீஸுக்கு வந்து சேர்ந்துவிடுவீர்கள். பிறகுதான் நாயுடு அவர்களுக்கு பதில்கூற உங்களுக்கு அனுபவம் இருக்கும்.

மற்றொரு அனுபவம் சொன்னார் நாயுடு. “ஒரு சர்வீஸ் பஸ்ஸில் பிரயாணம் செய்ய நேர்ந்தபோது பஸ் கண்டக்டரின் நாணயத்தை சோதித்தறிய விரும்பி என்னுடைய விலையுயர்ந்த புகைப்படக் கருவி (நிகழ்ச்சிகளை சினிமா படம் எடுக்கும் கருவி) ஒன்றை பஸ்ஸிலேயே விட்டு விட்டு வழியில் இறங்கிப் போய்

REGD. INSIST ON Original Wheel Mark Diamonds REGD.
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
(FAMOUS FOR BRILLIANCE)
REGD. CHENNI RADHAKRISHNAN & CO., REGD.
BIG BAZAAR, TRICHINOPOLY.

விட்டேன். நான் பிரயாணம் செய்த அந்த மோட்டார் வண்டியின் நம்பரைமட்டும் குறித்து வைத்துக்கொண்டேன். மறுநாள் போலீஸில் இதைப் பற்றிப் புகார் பதிவு செய்தேன். பர்மிங்ஹாம் என்ற நகருக்குச் சென்று இருந்துவிட்டு மீண்டும நான லண்டன் வந்ததும் "பஸ் சர்வீஸ்காரர்கள் நடத்தும் காணாமற்போன பொருள்களின் சேகர நிலையம்" சென்று விசாரித்தபோது என்னுடைய காமிரா கவனமாக அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிசயித்தேன். அது சம்பந்தமான ரிஜிஸ்தரை நான் பரிசோதித்துப் பார்த்தேன். நான் பஸ்ஸில் காமிராவை விட்டுவிட்டு இறங்கிய சில நிமிஷங்களுக்குள் அது இந்த நிலையத்தில் சேர்ப்பிக்கப்பட்டிருந்ததாகக் கண்டு எனக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

"வர்த்தகர்களின் நேர்மையைப் பற்றியும் நான் சோதித்திருக்கிறேன். ஒருசமயம் ஒரு கடையில் 100 பாட்டரிகளை விலைக்கு வாங்கிக்கொண்டு போனேன். நான்கு நாள் கழித்துக் கணக்குப் பார்க்கும்போது 91 தான் இருந்தது. மற்றவை எப்படிக் காணவில்லையென்பதை நான் கண்டுபிடிக்க முடியவில்லை. மிகுந்திருந்தவற்றிலும் 6 பாட்டரிகள் மின்சாரம் இழந்து கெட்டுப் போயிருந்தன. பின்னும் இரண்டு தினங்களுக்குப் பிறகு கடைக்காரனிடம் சென்று தெரிவித்தேன். "எந்த இடத்தில் ஒன்பது பாட்டரிகள் கெட்டுப்போனது தெரியுமா?" என்று கேட்டான் கடைக்காரன். "வாங்கிக் கொண்டுபோன நான்கா நாள்தான் 9 பாட்டரிகள் காணவில்லையென்பதை அறிந்தேன். எந்த இடத்தில் அவை தவறிப்போயின வென்பதை நான் அறியேன்" என்று கூறினேன். மறு கேள்வி கேட்காமல் காணாமற்போன 9 பாட்டரிகளுடன் கெட்டுப்போன 6-க்கு வேறு பாட்டரிகளும் சேர்த்துப் பதினைந்து பாட்டரிகளை அவன் உடனே எனக்குக் கொடுத்துவிட்டான்.

"ஹோட்டல்களில் இன்னும் வேடிக்கை. லண்டன் மணிக்கூண்டுக்கு அருகாமையில் பிரசித்தமான ஒரு ஹோட்டல் இருக்கிறது. அங்கே சென்றால் நமக்குத் தேவையான உணவு வகைகளை நாமே எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிடலாம். அதைக் கவனிக்கவே அங்கு யாரும் ஆட்கள் இல்லை. நம்முடைய நாணயத்தில் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள். விலை விபரங்கள் அங்கே எழுதி ஒட்டியிருக்கிறது. நாமாகக் கணக்கிட்டு சில்லறையை பொக்கிஷதாரிடம் கொடுத்துவிட்டுச் செல்லவேண்டியதுதான். முதல் நாள் நாங்கள் மூவர் அங்கே சென்று வேண்டியமட்டும் சிற்றுண்டி அருந்திவிட்டு பேசாமல் வெளியே போய்விட்டோம். யாரும் எங்களை வழியில் தடுத்துப் பணம் கேட்கவில்லை. ஆச்சர்யமாக இருந்தது எனக்கு. மறுநாளும் இப்படியே செய்து பார்த்தேன். மூன்றாநாள் எனக்கே பரிதாபமாகப் போய்விட்டது. அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை நம்ப முடியாததாக இருந்தது. மூன்று நாளைய தொகையையும் சேர்த்துச் செலுத்திவிட்டேன். கடைசியாக. வர்த்தகர்கள் அதிகாரிகள் பொதுமக்கள் பாஸ்பரம் வைத்திருக்கும் மதிப்பும் நம்பிக்கையும் இங்கிலாந்து மக்களின் சமூகக் கட்டுக்கோப்பின் ஜீவாதார சக்திகளாக விளங்குவதைக் காணப் பொறுமையாகக்கூட இருக்கும்."

(தொடரும்)



சிவாஜி

அறவலி காத்து நாளும்
அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம்
உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 6—2—49

சிறு குறிப்புகள்

பர்மாவும், சீனவும்

தூரக் கிழக்கில் தீவிரமான அரசியல் மாறுதலுக்கான வாடை தென்படுகிறது. சீனவில் இதுகாறும் இருந்து வந்துள்ள உள் நாட்டுக் குழப்பம் முடிவடையும் தருவாயில் ஒரு புறமிருக்க, பர்மாவில் உள்நாட்டுப் போர் நடந்துவருகிறது.

சீன அரசியலிலிருந்து சியாங் கே ஷேக் விலகிய கையோடு அரசாங்கத் தரப்பிலிருந்து தீவிர சமாதான முயற்சிகள் ஆரம்பித்தன. வானொலி அறிவிப்புகளும், சமாதான தூதுகோஷ்டிகளும், திட்டங்களும் நாளுக்கொரு விதமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சண்டையென்னவோ முடிந்தபாடில்லை.

இந்த நிலையைப் பார்த்தால் கம்யூனிஸ்டுகள் பூரணமான ராணுவ வெற்றியின் மூலம் எவ்வித கூட்டு அதிகாரப் பரிவர்த்தனைக்கும் உட்படாமல் தங்கள் அரசாங்கத்தை ஸ்தாபிக்க முனைந்திருக்கிறார்களெனத் தெரிகிறது.

பர்மாவில் தாகின்நூ அரசாங்கம் தற்போது ஆட்சி நடத்தி வருகிறது. இது தீவிர இடதுசாரிக் கொள்கையைக் கடைப்பிடித்த போதிலும் பர்மிய கம்யூனிஸ்டுகளால் விரோதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பர்மாவின் மிகப் பெரிய சிறுபான்மையினரான காரன் வகுப்பினர் தமக்கென தனியரசு வேண்டுமென ஆயுதம் தாங்கிப் போர் புரிந்து வருகிறார்கள். ரங்கூனிலேயே குழப்பம் நேரிட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகளையே பிரதான விரோதியாகப் பாவித்து வரும் தாகின நூ அரசாங்கம் பர்மிய ஒருமைக்குள்ளேயே காரன்களுக்குத் தனியரசு கொடுக்கத் தயாராயிருக்கிறது. இதன் மூலம் காரன்களின் அனுதாபத்தை சம்பாதிக்க விழைகிறது.

காரன்கள் இதற்கு ஒப்புவார்களா என்பதும், பர்மிய கம்யூனிஸ்டுகள் இனி எவ்வாறு தமது கொள்கையைக் கொண்டு செலுத்துவர் என்பதும் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

பர்மா, சீன இரண்டுக்கும் இந்தியாவுடன் எல்லைத்தொடர்பு இருக்கிறது. எனவே இந் நாடுகளில் நடக்கும் அரசியல் மாற்றங்கள் இந்தியாவை பாதிக்கலாம்.

திரு. ஜி. டி. நாயுடு

"அனுபவ ஞானியின் குறிப்புகள்" ஆயிரக்கணக்கான வாசகர்களால் வாரந்தோறும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். அபாரமான சாதனைகளைப் புரிந்து வாழ்வையே ஒரு கலையாக நடத்திவரும் நாயுடு அவர்கள் தமிழ் மக்களால் நன்கு அறியப்படாத ஒரு மேதை. அவருடைய அறிவும் திறமையும் இந்த நாட்டுக்கு கோடானு கோடி செல்வத்தையும் நல்வாழ்வையும் தரும் பொக்கிஷமாகும். ஆயினும் அவையனைத்தும் இன்று அரசியலாரின் அலட்சியத்தாலும் சமூகத்தின் பொறுப்பின்மையாலும் நாட்டிற்குப் பெரு நஷ்டமாக இருக்கிறது. திருவாளர் நாயுடு அவர்களைப் பற்றி விரிவாக நன்கு மக்கள் அறிந்து கொண்டால் அவர்களாவது எழுச்சியுற்று அரசியலாரை விழிப்படையச் செய்யக் கூடுமென்ற நம்பிக்கையாலும், நாயுடு அவர்களைப் போற்றி அவருடைய திறமையையும் அறிவையும் பொது நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்ள வழி பிறக்கலாமோ என்ற ஆசையினாலும் "அனுபவ ஞானியின் குறிப்புகள்" என்ற தொடரில் முடிந்த வரையில் விரிவான செய்திகள் தொகுத்துக் கொடுக்க விரும்பினோம்.

நாயுடு அவர்களை இதுவரையில் நாம் நன்கு புரிந்துகொள்ளவில்லை; புரிந்துகொள்ள முயற்சிக்கவும் இல்லை. ஆனால் அமெரிக்கா, ஜெர்மனி போன்ற வெளிநாடுகள் நாயுடு அவர்களின் அளவற்ற ஆற்றலைப் பல ஆண்டுகளுக்கு முன்பே நன்கு அறிந்து போற்றி வருவதுடன் விஞ்ஞான உலகில் அவருடைய அற்புதமான சாதனைகளைப் பயன்படுத்திக்கொண்டுமிருக்கிறார்கள் என்பதை அறியும்போது நம்முடைய செல்வத்தை அன்னியர்கள் கொண்டுபோய் விடுகிறார்களே என்பது போன்ற வருத்தமே மேலிடுகிறது.

இந்தத் தொடரின் மூலம் தமிழ் மக்களுக்கு நாயுடு அவர்களைப்பற்றிய சிறு அறிமுகமாவது கிடைக்குமென்று நம்புகிறோம்.

கோலாப்பூர்

சுமார் ஒரு ஆண்டுக்கு முன்னால் நமது 'சிவாஜி' 1948-ம் வருட ஜனவரி மாத 11-ம் தேதி இதழின் மூன்றும் பக்கத்துப் பிரதான கட்டுரையில்மராட்டிய வீரத்தின் மாண்புமிக்க வழித்தோன்றலான கோலாப்பூர் மகாராணியுடன் நமது நிருபர் தஞ்சையில் கண்ட பேட்டி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அக்கட்டுரையில் கோலாப்பூரின் மாண்புபற்றிக் குறிப்பிடுகையில் "கோலாப்பூர் சமஸ்தானம் மட்டுமே பண்டைய மஹாராஷ்டிர தியாகத்தின் சின்னமாக இன்றுமிருந்துவருகிறது" என்று குறிப்பிட்டிருந்தோம்.

பொது நலனில் பெருத்த அக்கரையுடன், இந்திய ஒருமையில் கவலைகொண்டு, கோலாப்பூர் மகாராஜா தமது சமஸ்தானத்தை இந்திய யூனியனில் பம்பாய் மாகாணத்துடன் இணைத்துவிட ஒப்பிவிட்டதன் மூலம் இத்தகைய தியாகம் ஒன்றை இன்று செய்திருக்கிறார்.

கோலாப்பூர் சமஸ்தானம் சுமார் மூன்று ஆயிரம் சதுர மைல்கள் விஸ்தீரணமும், பதினைந்து லட்சம் ஜனத்தொகையும் கொண்டது. இவர்களில் எண்பது சதவிகிதம் மராத்தியர்கள்.

கோலாப்பூர் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் 1700-ம் ஆண்டில் சத்ரபதிதாராபாய் மகாராணியால் ஸ்தாபிக்கப்பட்டு, வீர சிவாஜியின் நேரான பரம்பரையால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. தட்சிணத்து சமஸ்தானங்களில் பதினெட்டாவதும், இந்திய யூனியனில் கடைசியாகச் சேர்ந்திருப்பதுமான இதன் சேர்க்கை தட்சிணம் முழுவதையும் ஒருமைக்குள் இணைத்து விட்டது.

கோலாப்பூர் ராஜ பரம்பரையைசேர்ந்த ஜூனியர் மகாராணி ஸ்ரீமதி விஜயமாலா சத்ரபதி சாகிபா சென்ற ஆண்டு ஜனவரியில் தஞ்சை விஜயம் செய்து அரண்மனை அதிதியாக இருந்து, நகரசபையாரால் அமோகமான வரவேற்பளிக்கப்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

பேரறிஞர் சப்ரு :

சென்றமாத இறுதியில் ஹிமோத்கிரி பர்வதம்போன்ற ஒரு மகத் புருஷர் நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டார். பிரிட்டிஷ் உடையில் உயர்தரமான பாரசீக கலாசாரத்தைக் கைக்கொண்டு வாழ்ந்த இந்தியர் என்றே அவரைச் சொல்ல வேண்டும்.

சாப்ரூ லிபரல் கட்சியைச் சார்ந்து சிலகாலம் இருந்து பின்னர் அதிலிருந்தும் விலகியவர். தாமே தனியான ஒரு கட்சியாக இருக்கத் தகுதி வாய்ந்தவர். இந்தியா பிரிட்டனுடன் சுதந்திரம் சம்மந்தமான பேச்சு வார்த்தை நடத்திய காலத்து முன்னணியில் நின்றவர். இ. தே. ரா. வீரர் விசாரணையின் போது சட்ட ஆலோசகராக இருந்து அரும்பணியாற்றியவர். இந்திய அரசியல் நிர்ணய வேலையில் நேரடியான பங்குகொள்ள முடியாமல் இவர் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தது நமது பெரிய துரதிர்ஷ்டமே.

திருச்சி டி. மு. கோர்ட்டு

O. S. 535/48

காதர்மொய்தீன் சாகிப் —வாதி

குலாம்மொய்தீன் சாகிப் வகையரு —பிரதிவாதிகள்

திருச்சி கோட்டை சிங்காரத் தோப்பு தெருவிலிருக்கும் காதர் பாச்சா சாகிப் சம்சாரம் சோடீ பீபீ என்கிற வஸீர்பீபீ அம்மாள் 2-ம் பிரதிவாதிக்கு. வாதி தனக்கு பிரதிவாதிகளால் எழுதி கொடுக்கப்பட்டிருக்கும் விடுதலைப்பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய ஷை தாவா தொடர்ந்து அது சமூகம் கோர்ட்டில் 9—2—49 பகல் 10 மணிக்கு ஈரங்கி போடப்பட்டிருப்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

R. சுந்தரேசன்,
வக்கீல்.

கரூர் டி. மு. கோர்ட்டு

O. P. 2/1949

குப்பு ரெட்டியார் —மனுதார்

சுப்பாரெட்டியார்—எதிர் மனுதார்

மனுதாரனுடைய தமயன் மகன் காலம்சென்ற மைனர் பிச்சக்காரனுக்கு வெங்கடாராம ரெட்டியாரால் வரவேண்டியிருந்த ரூ. 360-0-0ஐ வசூல் செய்ய வார்சு சர்டிபிகேட் கிடைக்க வேணுமாய் மனுதாரன் தாக்கல் செய்திருக்கும் மனு 23—2—49 தேதிக்கு போடப்பட்டிருக்கிறது.

A. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
வக்கீல்.

27-1-49 கரூர்.

குளித்தலை டி. மு. கோர்ட்டு

O. S. 418/48

R. சுந்தாரூஜய்யங்கார் —வாதி

தி. தா. தென்னூர் High Road No. 60 விருந்துவந்த R. பஞ்சநதய்யர் 1. P. கோபாலய்யர் 2. P. முத்துசாமி அய்யர் 3. —பிரதிவாதிகள்

ஷை பிரதிவாதிகளுக்கு தெரிவிப்பதாவது.

வாதி உங்கள்பேரில் புரோநோட்டுப்படி ரூ. 1500—0—0 கிடைக்க தாவாசெய்து 18-2-49 தேதி ஈரங்கி ஏற்பட்டிருக்கிறது. அன்று நீங்கள் ஆஜராகாவிட்டால் தாவா எகஸ்பார்ட்டியாக தீர்ப்பாகிவிடும் என்பதை அறியவும்.

K. திருவேங்கடாச்சாரியார்,
வக்கீல்.

27-1-49 குளித்தலை.

குளித்தலை டி. மு. கோர்ட்டு

O. S. 511/1948

மு. தா. கோமங்கலம் வடக்கிப்பட்டி கருமன் மூத்திரியன் மகன் சின்னத்தம்பி மூத்திரியன்—வாதி

ஷையூர் கருமன் மூத்திரியன் மகன் உத்தண்டி மூத்திரியன் —2-ம் பிரதிவாதி

ஷை நெம்பரில் வாதி பாகத்திற்கு தாவாதுடர்ந்து ஷை தாவா 18—2—49-ல் ஈரங்கி ஆனதால் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் ஆஜர் ஆகாவிடில் எக்ஸ்பார்ட்டி செய்யப்படும் என்பதை அறியவும்.

குளித்தலை
31-1-49 } M. GANESAN,
Advocate.

விமர்சனம்

தாமஸ் மஸாரிக்:

(முயற்சி வெளியீடு, 64 டிஸ் பென்சரி ரோட், பல்லாவரம், சென்னை. விலை அணு 12.)

ஐரோப்பிய அரசிலில் பல் வேறு தனி நாடுகள் பங்கு கொண்டிருந்தும் இவற்றைப் பிரித்து அவ்வப்போது நிலவும் தனிப்பட்ட அரசியல் நிலைகளைக் கணித்துக்கூறுவது சிரமமான காரியம். ஒரு நாட்டின் குறிப்பிட்ட காலத்து சரிதத்தை வரைவதென்றால் ஏனைய நாடுகள் எல்லாவற்றின் சமகால சரிதமும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இது ஐரோப்பிய சரித்திரத்தின் முக்கியமான விசேஷ குணம்.

அதிலும் பிரிட்டன், ஸ்விட்ஜர்லாந்து இவைதவிர ஏனைய ஐரோப்பிய நாடுகளின் பூகோள எல்லைகள் அடிக்கடி மாறியிருப்பதுடன், இந்த மாற்றங்கள் சிக்கலான பல அரசியல் உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இதிலும், செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா ஹங்கேரி, போலந்து, பொஹீமியா, மொரோவியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் ஆகிய கிழக்கு, தென்-கிழக்கு பிராந்தியச் சிறு நாடுகள் விஷயம் ரொம்பச் சிக்கலானது.

தாமஸ் மஸாரிக் என்ற (1850—1937) செக்கோஸ்லோவேகிய தேசியப் பெருந்தகையின் வாழ்க்கையை சுருக்கமாகக்கூறும் இந்நூல் இந்த உண்மைகளை உணர்ந்து தக்க சமகால சரித்திரக் கோர்வையுடன் வரையப்பட்டிருக்கிறது.

தாமஸ் மஸாரிக் செக் மக்கட் குலத்தினர் ஆஸ்ட்ரிய ஆதிக்கத்தில் அழுந்தித் தவித்து வந்த காலத்தில் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். வாலிபப் பருவம் ரொம்ப சிரமத்துடன் கழிந்தது. கல்வி கற்பதில் அவர்காட்டிய ஆர்வம் ஒன்றே அதற்கிருந்த இடையூறுகளை அவர் கடக்க உதவி செய்தது.

உயர்ந்த கலாசாலைக் கல்வி கற்று இலக்கிய-சரித்திர ஆராய்ச்சியில் தேர்ந்த பேராசியரானர் மஸாரிக். செக் இனப்பற்றும், தேசிய உணர்ச்சியும் அவரை ஒரு மகத்தான தேசிய இயக்கத்தின் தலைவராக்கின.

சென்ற முதல் மகாயுத்த (1914-1918) காலத்தில் தாமஸ் மஸாரிக் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆஸ்திரியாவுக்கு விரோதமாகத் தம் மக்களுக்கு நேச நாடுகளின் ஆதரவைத் தேடிப்பெற்று, செக்கோஸ்லோவேகியாவைத் தனிச் சுதந்திர நாடாக்கி அதன் முதல்

(அடுத்த பக்கம் பார்க்க)

பிப்ரவரி 25ந்தேதி ஆரம்பமாகிறது.

கதை. வசனம்: ஸி.என். அண்ணாத்துரை · டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி

எம்.வி.ராஜம்மா · வி.என். ஜானகி · கே. ஆர். ராமஸ்வாமி
டி.எஸ். பாலையா நடித்தது · நடனங்கள் · லலிதா-பத்மினி

ஸ்டுடியோ—ஸெண்ட்ரல்

திருச்சி டி. மு. கோர்ட்டு

O. S. 482/48 I. A. 42 /49

1. ஆண்டி உடையார்
2. நடேச உடையார்—வாதிகள்

1. முத்தாயி
2. அகிலாண்டத்தம்மாள்
3. ராமசாமி உடையார்
4. நடேச உடையார்

—பிரதிவாதிகள்

ஷை கெம்பர் 4-ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பது யாதெனில்

இந்த கெம்பர் வாதிகள், 1-ம் பிரதிவாதியால் 2-ம் பிரதிவாதிக்கு 29—7—42-ல் எழுதிவைத்திருக்கிற செட்டில்மெண்டு பத்திரம் வாதிகளையும் 3, 4 பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தாது என்று டிக்ளேர் செய்ய வேணுமாக தாவா தொடர்ந்து 10—2—49 தேதி போடப்பட்டிருக்கிறது. ஆட்சேபனையிருந்தால் அன்று ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும்;

ஏ. ராமசாமி அய்யர்,
வக்கீல்.

திருச்சி சப் கோர்ட்டில்

O. S. 156/48 I. A. 53/49

1. ஆண்டி உடையார்
2. நடேச உடையார்-வாதிகள்

1. முத்தாயி
2. அகிலாண்டத்தம்மாள்
3. ராமசாமி உடையார்
4. நடேச உடையார்

—பிரதிவாதிகள்

ஷை நம்பர் 4-ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பது யாதெனில்

இந்த நம்பர் வாதிகள் 1-ம் பிரதிவாதியால் 2-ம் பிரதிவாதிக்கு 3—9—40-ல் எழுதி வைத்திருக்கிற செட்டில்மெண்டு பத்திரம் வாதிகளையும் 3, 4 பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தாது என்று டிக்ளேர் செய்யவேணுமாக தாவா தொடர்ந்து 8-2-49 தேதி போடப்பட்டிருக்கிறது. ஆட்சேபனையிருந்தால் அன்று ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும்.

A. ராமசாமி அய்யர்,
வக்கீல்,

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd. MADRAS,

தேவை

ரூ. 9 விலையுள்ள 6 கெஜம் கலர் சில்க் சாம்பின் சாரிகளை விற்பனைசெய்ய ஏஜெண்டுகளும் விற்பனையாளரும் தேவை மூன்று சாரிகளுக்கு மேல் வாங்குவோருக்கு வி. பி. கட்டணம் இலவம்.

ஜோதி ஆடைகள்

கோட்டார், (தென் திருவிதாங்கூர்.)

1839ம் வருடத்திலிருந்து இன்னமும் முதல்தரமாக பிரக்யாதி பெற்று விளங்குகிறது!

உலக பிரசித்திபெற்ற
அசல்
ஷண்முகம் பட்டணம் பொடி
உலக மார்க்கை கவனித்து வாங்கவும்
எங்கும் கிடைக்கும்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி
தபால் பெட்டி 140. மதருஸ்

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய துலேக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனுல் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளேக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

பர்மாவுக்கு இந்திய தூதுகோஷ்டி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கு இதுவேறு சேர்ந்தால் சங்கடம் அதிகமாகும்.

இந்திய அரசாங்கம்

இந்த நிலையில் இந்திய அரசாங்கம் தன் கொள்கையை இன்னும வெளிப்படையாக அறிவிக்கவில்லை. இந்திய அரசாங்கத்துக்கு இந்தியர் நலனில் அக்கரையில்லை என்று கூற முடியாதெனினும், இதைத் தக்க சமயத்தில் கொண்டு செலுத்த வேண்டுமே என்ற கவலை நமக்கு இருக்கத்தான செய்கிறது.

"பர்மாவின் உள்நாட்டு நடவடிக்கைகளில் இந்தியா சிறிதும் தலையிடாது; மேலும் இந்தியா - பர்மா பிரிவினைக் காலத்தில் இந்தியாவுக்கு பர்மாவிடமிருந்து வரவேண்டியிருந்த ஏராளமான கடன் முழுவதையும் இந்தியா தள்ளிக் கொடுத்துவிடும்" என்று பண்டித நேரு பர்மியத் தலைவர்களுக்கு உறுதி மொழி கொடுத்திருப்பதாக சில தகவல்கள் கூறுகின்றன. இது உண்மையெனில் கவலைக்குரிய விஷயமாகும்.

ஏனெனில், பர்மாவுடன் இந்தியா சுமுக மனப்பான்மை காட்டுவது நியாயமானுலும், அதற்காக இந்திய நலன்களைப் பறிகொடுத்துவிடுவது சரியாகாதல்லவா?

மேலும், பர்மாவில் இந்திய அம்பாசடராகவிருக்கும் டாக்டர் ரவூப் பர்மாவில் நீண்டகாலமாக இருப்பவராகையால் அவருக்கு இந்திய நலவுரிமையில் விட, தமக்கு பர்மிய அரசாங்கத்திடம் இருக்கும் நட்பிலேயே அதிக அக்கரை காட்டுவாரென்றும் கூறப்படுகிறது.

இத்தகைய நிலையில் பட்டாபி தூது கோஷ்டிக்கு இவரிடமிருந்து போதுமான உதவியும், ஆதரவும் கிடைக்காதோ என்று அஞ்ச இடமுமிருக்கிறது. இது விஷயத்தில் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தி ஆவனசெய்ய வேண்டும்.

பட்டாபி தூது கோஷ்டியார் கவலையுடன் தமது கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதுடன், இந்திய அரசாங்கம் போதுமான அக்கரைகாட்டி இந்தியர் நலனைக் காப்பாற்ற வேண்டுமென்பதும் கவனிக்க வேண்டிய இன்றியமையாத பொறுப்புக்கள் என்பதை அழுத்தமாக வற்புறுத்த விரும்புகிறோம்.

✷

காந்தி நினைவு

திருவானைக்காவல் பாரதித் தெரு எவரெடி வைரத்தொழிற்சாலை கட்டிடத்தில், காந்தி ஞாபகார்த்த சங்கத்தின் சார்பாக 30—1—49 மாலை ஆராதனைகளும், ஸ்ரீரெங்கம் முனிசிபல் மாஜிவைஸ் சேர்மன் உயர் திரு. கே. வி சீனிவாசக் கோனுர் அவர்கள் தலைமையில் பிரார்த்தனை கூட்டமும் நடைபெற்றன. அவ்வமயம் கவுன்ஸிலர் திரு. எம். ராமய்யா அவர்களும், திரு. வடிவேல் அவர்களும், திரு. சி. நமசிவாயம் அவர்களும், திறம்படசொற்பொழி வாற்றினுர்கள். இரவு 7-30 மணிக்கு அகில இந்திய திருச்சி வானெலி நிலயசங்கீத டைரக்டர் ஸ்ரீ கே சி. தியாகராஜன் கோஷ்டியினர் காந்தி மஹான் சரித்திரத்தை விமரிசையாக நடத்தினுர்கள்.

★

தாமஸ் மஸாரிக்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஜனுதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மஸாரிக்கின் தீவிர அரசியல் ஈடுபாடு அறுபது வயதுக்கு மேல்தான், அதற்கு முன்பெல்லாம் அவர் செல்வாக்கு மிகுந்த பேராசியராகவும், அறிஞராகவும், இலக்கிய-சரித்திர ஆராய்ச்சியாளராகவுமே இருந்தார். இன்றைய சரித்திர ஆசிரியனது நோக்கில் மஸாரிக் செக் கலாசாரத் தலைவரென்ற முறையிலேயே சிறப்பாகக் காட்சியளிக்கிருர் என்பதை வற்புறுத்துவது சந்தர்ப்பப் பொருத்தமாயிருக்கும்.

விமரிசனத்திலிருக்கும் இச்சிறு நூலில் செக் சரித்திரத்தின் பழைய பாகம் மத்தியகாலத்திலிருந்து (Middle Ages) சுருக்கமாக விமரிசிக்கப்பட்டிருப்பது நன்ருக அமைந்துள்ளது.

புத்தகத்தின் கடைசியில் 'வரலாறு காணத்துணையான நூல்கள்' என்ற பகுதியிலும் இடையில் சில இடங்களிலும் சில அச்சுப்பிழைகள் காணப்படுகின்றன. 15-ம் பக்கத்தில் 'படைகளை ஏமாற்றி விரட்டிய சிறுவன்' என்று தலைப்பிட்ட பகுதியில் ஆரம்பத்தில் "இங்கே வாந்திபேதி நடக்கிறது" என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பதைத் தக்கவாறு மாற்றியமைத்தல் நலம்.

"ஸ்ரீரா"

குளித்தலை டி. மு. கோர்ட்
O. S. 541/48

ப. ஜெ. வைத்திலிங்கம் செட்டியார்—வாதி.

திருவண்ணுமலை முருகேசன் பேட்டை A. சித்தையன் செட்டி—பிரதிவாதி.

ஷை பிரதிவாதிக்கு தெரிவிப்பதாவது

வாதி, உம்பேரில் கணக்குப்படி ரூ. 472/-கிடைக்க தாவாசெய்து 26—2—49-உ வாய்தா ஏற்பட்டிருக்கிறது. அன்று நீர் ஷை கோர்ட்டில் ஆஜராகி உம் கக்ஷிகளை தெரிவித்துகொள்ளாவிடில் எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பாகிவிடும் என்பதை அறியவும்.

K திருவேங்கடாசாரியார்
வக்கீல்
1—2—49



பட விபரிசனம்

"கஜமுகன்"

ஹிந்தி சந்திரலேகா

பாட்டாளி ஒருவன் நாள் முழுதும் உழைத்து ஓய்ந்து போகிறான். மனைவி மக்களும் வீட்டிலே நாள்பூராவும் அடைந்து கிடப்பதால் விச்ராந்தியாக, மனம் உல்லாஸமடைய எங்காவது போகவேண்டுமென்று விரும்புகிறார்கள், 'ஸரி ஸினிமாவுக்குத்தான் போகலாம்' என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. சிலமணி நேரம் தம்மை மறந்து களிப்பெய்தி வரலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஸினிமாவில் அவர்கள் காணும்காட்சி என்ன? ஒரே துன்பம், துயரம், அழுகை. இவைதான். சாந்தி பெறப்போன இடத்தில் இன்னும் பவவேதனையைத் தூண்டும் காட்சிகளைக் கண்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? பொழுது போக்குக்காகபோன இடத்தில் பொழுது தொலையாதா என்று எரிச்சல் வந்தால் என்ன செய்வது? இம்மாதிரி மக்கள் கருதாமல், 'பொழுது போக்கு' என்பதை உண்மையான பொழுது போக்காகவே செய்து, மனதில் உல்லாஸமும், உத்ஸாகமும் ஊட்டுவதற்கான ஸினிமாப் படங்கள் அவசியம் வேண்டும். புராணபடத்தில் அஸம்பாவிதமான ஹாஸ்யச் செருகல்கள் செய்து ஏமாற்றுவதில் அர்த்தமில்லை அது நிறைவும் பெறாது.

காரணமில்லாமல் இவ்வளவு தூரம் எழுதவில்லை. உண்மையான பொழுதுபோக்கு படம் ஒன்றை பார்த்தபின்னரே இவ்வாறு எழுதத்தோன்றியது. ஆம், தமிழ் நாட்டவர் கண்டுகளித்த 'சந்திரலேகாவை, அகில இந்தியாவும் காண்பதற்கென்று அதை 'ஹிந்தி'ப்படுத்தி வட நாட்டில் திரையிட்டிருக்கிறார்கள் ஜெமினியார்! தமிழ் நாட்டில் ஹிந்திப் படங்களை பாஷை புரிந்தாலும் புரியாவிட்டாலும் நம்மவர்கள் பார்க்கத் தவறுவதில்லையல்லவா? தமிழ்ப் படங்களைவிட ஹிந்திப் படங்கள் மிகவும் உயர்ந்தது என்று கருதுபவர்களும் உண்டு. சமீபத்தில் சில ஹிந்திப்படங்களை நான் கண்டபோது இந்தக்கருத்து எவ்வளவு தவறானது என்று தோன்றியது.

தமிழ் நாட்டவரிடம் ஒரு உயரிய குணம் உண்டு. அதாவது தற்பெருமையில் நமக்கு நம்பிக்கை கிடையாது. பிறருடைய காரியம் எதுவாக இருந்தாலும் அது நன்றாக இருக்கிறது என்று சொல்வதில் நாம் சிறிதும் தயங்குவதில்லை. பிறருடைய கலைகளையும் நாம் சிறிதும் பாராட்டி ஆதரிக்கத்தவறுவதில்லை. இந்த மனப்பான்மைதான் ஹிந்திப்படங்கள் தமிழ் நாட்டில் மாதக்கணக்கில் ஓடுவதற்கு இடம்கொடுத்தது. அதனால் குற்றமில்லை. ஆங்கிலப் படங்களைப் பார்த்து ரஸிக்கும்போது நமதுராஷ்டிரபாஷை படத்தை பார்த்து ஆனந்திக்கக் கூடாதா என்ன? தாராளமாக. ஆனால் நமது தமிழ் நாட்டில் பிடிக்கும் படங்களை வெளியார் யாராவது பார்க்கிறார்களா? கண்டிப்பாக இல்லை. நமது படங்கள் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிப்போக முடியாது. பிறகு, எப்படித்தான் நமது கலைத்திறனை பிறர் அறிந்து கொள்வது? நவநாகரீக, அணுகுண்டு யுகத்தில் எதற்கும் வழி இல்லாமல் போகாது. எல்லோருக்கும் புரியும்பாஷையை நமது படங்களில் புகுத்திவிட்டால், நமது படங்கள் எல்லை தாண்டிப் போகலாமல்லவா? இந்தக்காரியத்தைத்தான் 'சந்திரலேகா' விஷயத்தில் செய்திருக்கிறார்கள்

இந்திய ஸினிமா சரித்திரத்தில் சந்திரலேகா ஒரு புதுமைதான். இதுவரை இம்மாதிரிப் படம் வெளியானதே இல்லை. தமிழை ஹிந்திப்படுத்தியதைச் சொல்லவில்லை. படம் பிடித்திருக்கும் விதத்தைத்தான் சொல்கிறேன்! மேல் நாடுகளிலிருந்து வரும் படங்களைப் பார்க்கும் போது என்ன என்ன பாராட்டு வார்த்தைகள் நம் மனதில் எழுகின்றனவோ அதேபோல் புகழுரைகள் நம் நாவில் துடிக்கின்றன. ஸெட்டிங்குகளும், இயற்கை காட்சிகளும், நடன ஒய்யாரங்களும், நம்மை அப்படியே பரவசப்படுத்துகின்றன. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை படக் காட்சியிலேயே நம் மனம் லயிக்கிறது. விறுவிறுப்பான கதைப்போக்கு சலிப்புத்தட்டாமல் செய்கிறது.

தமிழுக்குப் பதிலாக ஹிந்தி வார்த்தைகள் பேசப்பட்ட போதிலும் வாய் அசைவுகளில் கொஞ்சம்கூட வித்தியாஸம் கண்டு பிடிக்க முடியவில்லை. ஹிந்தியிலேயே அஸலாகப் பிடிக்கப்பட்ட படம்போல் தோன்றுகிறது. காட்சிஜோடனைச் சிறப்பும், காமிரா செய்த அற்புதங்களும் நிறைந்து விளங்குகிறது சந்திரலேகா. நெஞ்சம் துணுக்குறும் சம்பவமோ, கண்ணீர் விட்டுக்கதறும் சம்பவமோ ஏதுமில்லாமல் மகிழ்வுடன் பார்த்து அனுபவிக்கக்கூடிய படம் இம்மாதிரிததான் இருக்கவேண்டும்.

ஹாலிவுட் படங்கள் எவ்வளவோ, கதையே இல்லாமல் ஒரே கும்மாளமாகவும், கேளிக்கையாவும் இருக்கும். நிகழ்ச்சித் தொடர்புக்காக ஏதாவது காமாசோமா என்று ஒரு கதையை சிருஷ்டித்துக்கொள்வார்கள். அம்மாதிரி வகையைச்சேர்ந்தது தான் இக்கதை இதைக் கொண்டு இப்படத்தின் தரத்தை மதிப்பிடவேமுடியாது. நடிப்பு, நடனம், இதர கேளிக்கைகள், படப்பிடிப்பு, இவற்றைக் கொண்டுதான் இதன் தரத்தை நிர்ணயிக்கலாம்.

ரஞ்சன், ராஜகுமாரி இவர்கள் இருவரின் நடிப்பும் இதில் அபாரமாயிருக்கிறது. இப்படத்தின்மூலம் இவர்களுக்கு பெரும் புகழ் கிட்டுவது நிச்சயம். மற்றவர்களுடைய நடிப்பிலும் அப் பழுக்குச்சொல்ல முடியாது.

இப்படத்தில் இரண்டு நல்ல அம்சங்களை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். மட்ட ரகமான ஹாஸ்யம் இல்லாமை ஒன்று. சோககட்டத்தில், பிலாக்கணம் பாடுவதுபோல் பாட்டுக்கள் பாட ஆரம்பிக்காதது இரண்டு. பாட்டுக்களே இல்லாமல் படம் பிடித்தாலும் ரஸிக்க முடியும் என்பதை சந்திரலேகா ஓரளவுக்கு எடுத்துக்காட்டுகிறது. இதில் பாடப்படும் பாட்டுக்கள் கவர்ச்சிகரமாக இல்லாதது ஒரு குறைதான்.

மேல் நாட்டுப்படங்கள் சிறந்தவற்றுடன் எளிதில் ஒப்பிடக்கூடிய இப்படத்தைப்பின் பற்றி இன்னும் அநேக படங்கள் 'ஹிந்தி பாஷையில்' தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம்.

குறிப்பு:— ஹிந்தி சந்திரலேகா புதுடெல்லியில திரையிடப்பட்ட தினத்தில் இந்தோனீஸிய மகாநாட்டுக்கு வந்திருந்த ஆசியப் பிரதிநிதிகள், மத்திய அரசாங்க மந்திரிகள், நமது பிரதம ஸேனாதிபதி ஆகியோர் இப்படத்தை ஆரம்பம்முதல் இறுதிவரை கண்டுகளித்தார்கள.

✷

ஸ்ரீ தேவி நாடகசபா

தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில் ஸ்ரீ தேவி நாடக சபையாரால் ஐந்தாவது வாரமாக நடத்தப்பெற்றுவரும் 'பராசக்தி' நாடகம் சென்ற 27—1—49 இரவு தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நாடகசபையினரது சேவையைத் தலைவர் பாராட்டிப்பேசிய பின்னர் நாடக சபைத்தலைவர் திரு கே. என். ரத்தினம் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

பிழை திருத்தம்

சென்ற இதழ் 'ஆதித்தன் கனவு' படவிமர்சனத்தில் சிறுவன் கீர்த்தியாகநடித்தது பத்மா என்று அச்சாகி இருக்கிறது. கீர்த்தியாக நடிப்பது சிறுமி சிந்தாமணி, என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

திருச்சி மாதர் சங்கம்

சென்ற ஜனவரி இருபத்தொன்பதாம்தேதி சனிக்கிழமையன்று திருச்சி மாதர் சங்கத்தினரால் சாவித்திரி வித்யாசாலையில் மகாத்மா காந்தியடிகளின் சிராத்த தினத்தை யொட்டி நூற்புயக்ஞமும், பகவத்கீதா பாராயணமும் நடத்தப் பெற்றன.



மனமாற்றம்

டி. எஸ். என். சாமி

மத்தியானம் சாப்பிட்டுவிட்டுச் சற்று கண் அயரலாமென்று கூடத்தில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் வந்து படுத்துக்கொண்டேன். ஏனோ எனக்குச் சாப்பாட்டிலும் ருசி கொள்ளவில்லை; பத்திரிகை படிக்கவும் மனம் இடம் கொடுக்கவில்லை. காரணம் என் பெண் கனகத்திற்கு இரண்டாந்தார விவாஹம் தான் நிச்சயமாகும் என்று இருந்ததுதான்; அன்று காலை தரகர் விச்வம் வந்து பம்பாய் வரனைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போனார். பையன் பார்ப்பதற்கு நல்ல அழகாகவும், நல்ல உத்தியோகம் உடையவனாகவும் தான் இருந்தான். வயது 35 ஆகியிருந்தது. ஆயினும் தோற்றம் இருபத்தைந்தே மதிக்கலாம். நல்ல சம்பளம்; பையனைப் பற்றிய வரையில் ஏதும் குறைவில்லை. இருந்தாலும் எனக்குத்தான், இரண்டாந்தார விவாஹம் என்றபோது மனதில் குழப்பமும் வெறுப்பும் ஏற்பட்டன. மனம் பன்முறை வெறுத்துப் பழைய ஞாபகங்களைக் கிளறிற்று.

நான்கு பெண்களுக்குக் கடைசிப் பெண்ணாக நீலாயதாக்ஷி என்ற பெயருடன் என் தந்தைக்கு நான் செல்லப் பெண்ணாகப் பிறந்திருந்தேன். நான் பிறந்த மூன்றாவது நாளே என் தாய் என்னை விட்டுவிட்டு யமனுலகம் ஏகிவிட்டாள். ஆகவே என் தந்தை என்னை அளவில்லாப் பிரியமுடன் வளர்த்து வந்தார். நான் எந்த சாமான் கேட்டாலும் இல்லை என்ற வார்த்தை அவரிடமிருந்து வராது. ஏனோ என் தமக்கைமார்களுக்கு இந்த பாக்கியம் இல்லாமல் போனது. அவர்களுக்கு என் மீது பொறுமையே ஏற்பட்டது. இது என் தகப்பனாருக்குச் சற்று ஆத்திரத்தையே உண்டுபண்ணியது. தங்கை என்ற பாசம் சிறிது கூட இல்லாமல் இருக்கிறார்களே என்று அவர்களிடம் எறிந்து விழுவார். இதைப் பார்த்து நான் கொஞ்சம் இறுமாப்புடனேயே இருந்து வந்தேன். இந்த இறுமாப்பு நீடித்து நிற்க கடவுள் சம்மதிக்கவில்லை போலும்!

என் தமக்கைமார்களுக்கு வரிசைக் கிரமமாகத் திருமணம் நடந்தேறியது. கடைசியாகச் செல்லப் பெண் நீலு நான்தான் நின்றுகொண்டிருந்தேன். எனக்கும் வழக்கப்படி ஜாதகப் பொருத்தம் பார்ப்பதும் வாலிபர்கள் வேட்டையும் நடந்தேறின. எனினும் பலன் இல்லை. ஒன்றொன்றாக வருடங்கள் உருண்டு ஓடின. தந்தையும் மனம் நொந்தார். என் மீது கொண்டிருந்த பாசமும் மாறிக்கொண்டே வந்தது. எனக்கும் கலியாணம் ஆகி புக்ககம் சென்று வாழ்க்கை நடத்துவோமா என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் எங்கள் தூர பந்து சேஷய்யரும் அவருடன் யாரோ சுமார் நாற்பது வயது மதிக்கத்தகுந்த ஒரு மனிதரும் வந்தார்கள். என் தந்தை அவர்களை வரவேற்று பலமாக உபசாரம் செய்தார். என்னைக் கூப்பிட்டு அவர்களுக்கு நமஸ்காரம் செய்யச் சொன்னார். நான் தயக்கத்துடன் நமஸ்காரம் செய்துவிட்டு உள்ளே சென்றுவிட்டேன். என் தகப்பனாரும் என்னைப் பின்தொடர்ந்து உள்ளே வந்தார்.

“இவர்தான் அம்மா உனக்குப் பார்த்திருக்கும் கணவர். இவருக்கு முதல் மனைவி இறந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. இவருக்கு ஒரு தங்கை கல்யாணம் ஆகி எங்கோ தூரதேசத்தில் இருக்கிறாளாம். அவருக்கு வேறு ஆதரவு ஒருவரும் இல்லை. சமீபத்தில் இருக்கும் புத்தூர் என்ற கிராமத்தில் ஆறு வேலி நிலமும் ஒரு பெரிய வீடும் இருக்கின்றன. தற்சமயம் பம்பாயில் ஒரு பெரிய பாங்கியில் மானேஜராக இருக்கிறார். நல்ல வருமானம். நம் நிலைக்கு உயர்ந்த வரன்தான் என்று சொல்ல வேண்டும். கலியாணம் ஆனவுடன் உன்னை ஊருக்கு அழைத்துக்கொண்டு போய்விடுவதாகவும் சொல்கிறார். உன் சம்மதத்தைத் தெரிவித்தால் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடலாம்” என்றார். எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. இவ்வளவு நாட்கள் சென்றும் இளையாளாக வாழ்க்கைப்பட வேண்டுமா என்ற கேள்வி என் மனதைத் துன்புறுத்தியது. மீண்டும் தந்தைக்குப் பாரமாகவும் நீண்ட நாள் கன்னிப் பருவம் கடக்காமலும் காலம் கடத்த மனம் மறுத்துவிட்டது. கடவுளின் இஷ்டப்படிதான் நடக்கும் என்று கலியாணத்திற்கு சம்மதித்துவிட்டேன்.

கலியாணம் விமரிசையாக இனிது நடந்தேறியது. எங்கள் இல்லற வாழ்க்கை பம்பாயில் ஒரு பெரிய வீட்டில் ஆரம்பமாயிற்று. நாட்கள் செல்ல என் தந்தையிடம் நான் பெற்றிருந்த அன்பைவிட அதிகமாகவே என் கணவரிடம் பெற்றேன். இந்த அன்பின் பெருக்கைக் கடவுள் காணச் சகியாது இதிலும் குறுக்கிட்டுவிட்டார். ஒரு நாள் இரவு கணவர் வெகுநேரம் வரையில் வரவில்லை. எனக்குத் தனிமையில் இருந்து பழக்கம் இல்லாததால் பயம் உண்டாகியது. தூக்கம் வராமல் விழித்துக்கொண்டே இருந்தேன். மணி பனிரெண்டு அடித்தது. கணவர் உற்சாகமற்று தள்ளாடிய வண்ணம் ஒரு குதிரை வண்டியில் வந்து சேர்ந்தார். நான் என்ன என்று அவர் அருகில் அணுகினேன். “எனக்குத் தலையை வலிக்கிறது; உனக்குத் தெரிந்த கஷாயம் ஏதாவது போட்டுக்கொண்டு வாயேன்” என்று சொல்லிவிட்டு கட்டிலில் போய்ப் படுத்துக்கொண்டார்.

நான் ஏதோ எனக்குத் தெரிந்த கஷாயத்தைப் போட்டுக்கொண்டுவந்து கொடுத்தேன். அது அவருக்குப் பலனை அளிக்கவில்லை. மறுநாள் முதற்கொண்டு எழுந்திருக்க முடியாமல் ஜ்வரம் அதிகமாக அடிக்கத் தொடங்கியது. அன்று முதல் எங்கள் வீட்டிற்கு டாக்டர்கள் வரத் தொடங்கினார்கள். எட்டு மாத கர்ப்பிணியான நான் அவருக்குத் தனிமையில் உதவி செய்ய முடியாமல் என் தந்தைக்குக் கடிதம் எழுதினேன். அவரும் வந்து சேர்ந்தார். என்னையும் என் கணவரையும் பார்த்து மனம் நொந்தார். அவருக்கு வந்திருக்கும் நோய் நகரில் பரவி இருக்கும் “மலேரியா” என்னும் ஜ்வரம் என்று டாக்டர்கள் மூலம் அறியலானோம். அவருக்கு நோய் தணிந்தபாடு இல்லை. டாக்டர்களும் கைவிட்டுவிட்டார்கள். விதி தன் விளையாட்டைக் காட்டிவிட்டது. நான் கைம்பெண்ணாகிக் கலங்கி நின்றேன். தன் அருமைச் செல்லப் பெண் சீர்குலைந்த துர்ப்பாக்கியத்தை எண்ணித் தந்தை மனம் வெதும்பினார். என்ன செய்வது? காலத்தை வெல்ல யாரால் முடியும்? தந்தையின் யோஜனைப்படி என் கணவரின் பூர்வீகமான புத்தூரை வந்தடைந்து அவருடைய பிதுரார்ஜித சொத்துக்குப் பாதுகாப்பாக இருந்துவந்தோம். பூர்ண கர்ப்பிணியாகிய நான் ஒரு பெண் குழந்தையைப் பெற்றுப் பிழைத்து எழுந்தேன்.

ஏக்கமே உருவாகி இருந்த என் தந்தை கனகம் பிறந்த மூன்றாவது மாதமே இறந்துவிட்டார்.

காலம் சுழன்றது. கனகம் குழந்தைப் பருவம் நீங்கி மங்கைப் பருவம் அடைந்தாள். அவளுக்குத்தான் இப்பொழுது இரண்டாந்தார வரன் வந்திருப்பது. அதற்காகத்தான் அந்த இரண்டாந்தார வரனைத் தீவிரமாக வெறுத்தேன். வேண்டாம் என்றே மறுத்துச் சொல்லிவிட்டேன். அப்படியே ஊஞ்சலில் படுத்திருந்த நான் கண் அயர்ந்துவிட்டேன்......மறுநாள் தரகர் விச்வம் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தார். “என்ன” என்று விசாரித்தேன். “வேறு ஒரு வரன் புதிதாக வந்திருக்கிறது. முதல் தாரம்தான். பையன் கல்கத்தாவில் ஏதோ வேலையாயிருக்கிறான். சொத்து ஒன்றும் இல்லை. வயதான தாயார் ஒருவள் இருக்கிறாள். வருமானத்திற்குக் கஷ்டம் இல்லை. வரன் தேவலை என்றால் முடித்துவிடலாம்” என்றார். எனக்கு முதல் தாரம் என்றதுமே மட்டில்லாத மகிழ்ச்சி. பையன் எப்படியிருந்தாலும் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டேன். கலியாணமும் நடந்தேறியது. கனகத்தையும் நல்ல நாளில் புக்ககம் அனுப்பிவைத்தேன். நாட்கள் மாதங்கள் ஆகி வருடங்கள் ஆகிக்கொண்டிருந்தன. ஒரு நாள் கனகத்திடம் இருந்து கடிதம் ஒன்று வந்தது. “என் கணவனுக்கு உடல் நலம் இல்லாததால் ஆஸ்பத்திரியிலே இருக்கிறார். நீ உடனே வரவும்” என்று தந்தியைப்போல் எழுதியிருந்தது. நான் உடனே ஊருக்குக் கிளம்பத் தயார் ஆனேன். நான் கிளம்புவதற்கு முந்தியே கடிதத்தைப் பின்பற்றி எதிர்பாராத விதமாக கல்கத்தாவிலிருந்து தந்தி ஒன்றும் இடியாக என் தலையில் வந்து விழுந்தது. கனகத்தின் கணவர் உடலில் இரத்தக்குழாய் உடைந்து உயிர் நீத்தார் என்ற தந்தியைப் படித்த நான் “ஐயோ கனகம், நீயுமா இப்படி ஆகிவிட்டாய்” என்று அலறி அசைவற்றுத் தரைமீது வீழ்ந்தேன். “அம்மா! அம்மா!! என்னம்மா இப்படித் தூக்கத்தில் உளறுகிறாய்” என்று கனகம் என்னை வந்து எழுப்பினாள். நான் திடுக்கிட்டு எழுந்து “ஒன்றும் இல்லை; ஏதோ அசட்டுச் சொப்பனம் கண்டேன் வேறொன்றும் இல்லை என்றேன்.

என் மனம் குழப்பம் நீங்கி ஒருவித முடிவுக்கு வந்தது. மறு தினம் வழக்கம்போல் தரகர் விச்வம் எங்கள் வீட்டுக்குள் பிரவேசித்தார். அவரை வரவேற்று ஒரு டம்ளர் காப்பியும் அரைக்கவுளி வெற்றிலையும் சமர்ப்பித்தேன். அதை அங்கீகரித்துக்கொண்டு “முடிவாக என்ன சொல்லுகிறீர்கள்” என்றார்.

நான் தயக்கம் இல்லாமல் “அந்த இரண்டாந்தார வரனையே முடித்துவிடுங்கள்” என்றேன். “ஏது இப்படி மனதையே மாற்றிவிட்டீர்கள். ஆச்சரியமாக இருக்கிறதே? எல்லாம் பிராப்தப்படிதானே நடக்கும்” என்று வெற்றிச் சிரிப்புடன் வெளியேறினார் தரகர் விச்வம்.

நான் ஏன் இப்படி முடிவு செய்தேன் என்பது எனக்கே இன்னும் புதிராக இருக்கிறது.

*

TRADE MARK
GVR
குவாலிடி காப்பி
திருச்சி.

ரேகை சாத்திரம்

கையின் ஏழு ரேகைகள்

"சிவதாஸன்"



1. முதல் அங்குலாஸ்தி
2. இரண்டாம் அங்குலாஸ்தி
3. மூன்றும் அங்குலாஸ்தி
4. சனி வளையம்
5. சுக்கிர வளையம்
6. இருதய ரேகை
7. சதுரம்
8. புத்தி ரேகை
9. முக்கோணம்
10. புதன் ரேகை
11. அருள் ரேகை
12. ஐக்கிய ரேகை
13. குழந்தை ரேகை
14. சூரிய ரேகை
15. விதி ரேகை
16. ஆயுள் ரேகை
17. செவ்வாய் ரேகை.

இதுவரை ஒருவர் நடக்கும் விதத்தின் குண விசேடத்தைப் பற்றியும், நகங்களின் அமைப்பினுல் ஏற்படும் பலன்களைப்பற்றியும், ஏழு கிரகங்களின் அமைப்பையும் கவனித்தோம்.

கையில் பல ரேகைகள் அமைந்திருக்கின்றன. அவைகளில் முக்கியமாக அழைக்கப்படுகின்றது ஏழு ரேகைகள். அவை யாவன ஆயுள், புத்தி, இருதயம், சூரிய ரேகை அல்லது தன ரேகை, சனி ரேகை அல்லது விதி ரேகை, புதன் ரேகை அல்லது ஆரோக்ய ரேகை, அருள் ரேகை இவைகளைத் தவிர சுக்ர வளையம், சனி வளையம், செவ்வாய் ரேகை, கங்கண ரேகை முதலியன. இவற்றின் அமைப்பைப் படத்தில் காண்க.

ரேகைகள் மிகவும் ஆழமாக இல்லாமலும், விசாலமாக இல்லாமலும் கையின் அளவுக்கு தகுந்தபடி அமையவேண்டும். ரேகைகளில் காணப்படும் சில முக்கிய குற்றங்களை ஆராய்வோம். ரேகைகள் ஒரே மாதிரியாக இல்லாமல் துண்டு துண்டாக அமைவதுண்டு. இந்த துண்டுபட்ட இடங்களில் சதுரம், முக்கோணம் முதலியவைகளால் இணைக்கப்படாமல் இருந்தால், துண்டுபட்ட கால அளவில் அந்த ரேகையின் பலன் மிகவும் குறைவு என்று அறிக. சிலரிடம் ரேகைகள் சங்கலி போல் அமைந்திருக்கும். இம்மாதிரி ஒரு ரேகை அமைந்தால் மிகவும் கெடுதலானது. ஒரு ரேகையில் புள்ளி காணப்பட்டால் தாற்காலிகமான ஒரு தடங்கல் என்பதை காட்டுகிறது. ஒரு ரேகை முடிவிலும், உற்பத்தியிலும் நட்சத்திர குறி அமைவதும் உண்டு. இதுமாதிரி ஆயுள் ரேகையிலிருந்தால் அந்த கால அளவில மரணத்தை கொடுக்கக் கூடிய சம்பவத்தையும், புத்தி ரேகையில் இருந்தால் புத்தி ஸ்வாதீனம் இழந்து போகும் என்பதையும் காட்டுகிறது.

நிற்க, ரேகைகளிலிருந்து வாழ்க்கையில் நடக்கும் அன்றுட சம்பவங்களைப் பற்றி கூற முடியாது. ஆனுல் ஆறு அல்லது எட்டு மாத கால அளவு வரை ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை சொல்லலாம். இந்த ரேகைகளுக்கு கால அளவு கண்டுபிடிப்பது மிகவும் முக்கியம். அநேக ஆராய்ச்சிக்காரர்கள் வெவ்வேறு விதங்கள் கூறியுள்ளனர். இதைப்பற்றி விவரமாக பின்பு கவனிப்போம்.

ஒருவரின் ஆயுளை நிர்ணயிப்பதில் ஆயுள் ரேகை முக்கிய பங்கை எடுத்துக்கொள்ளுகிறது. இந்த ஆயுள் ரேகையைப்பற்றி அடுத்தவாரக் கட்டுரையில் விவரிப்போம்.

புதுக்கோட்டை

சென்ற ஜனவரி 29-ல் புதுக்கோட்டை 'அணிகலம்' காரியாலயத்தில் புதுக்கோட்டை தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் தலைவர் திரு. லெ. கதிரேசன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. 'புதுக்கோட்டையைத் தனிஜில்லாவாக்க வேண்டுமென்று ஏகமனதாய் தீர்மானிப்பதுடன் ஜில்லாவாக்குவதற்குரிய விஸ்தீர்ணம், ஜனத்தொகை, வரி வசூல் முதலியவற்றிற்கு தகுதியுடையதாக்க புதுக்கோட்டையுடன் அருகிருக்கும் ஜில்லாக்களிலிருந்து சில தாலுக்காக்களை இணைத்து விடலாமென்றும், இதற்கு மக்கள் கருத்தும் ஒத்திருப்பதால் இவ்வண்ணமே சென்னை அரசாங்கம் புதுக்கோட்டையைத் தனிஜில்லாவாக்கவேண்டுமென்றும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது' என்ற தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திருமணம்

சென்ற பிப்ரவரி மூன்றும் தேதி வியாழனன்று கும்பகோணத்தில் 'காவேரி' மாசிகையின உரிமையாளர் திரு சிக்கா அவர்களது புதல்வன் சி. கிருஷ்ணசாமிக்கு உபநயனம் நடைபெற்றது. மேலும் அன்னூது குமாரத்தி சௌ. ராஜலட்சுமிக்கும், தமிழ் நாடு டாக்கீஸ் உரிமையாளர் எஸ். சௌந்தராஜய்யங்கார் குமாரர் சி. எஸ். ஶ்ரீனிவாசன் அவர்களுக்கும் திருமணமும்நடைபெற்றது.

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனுதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம்,
அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல்
வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

தேவை

புதிதாக வந்திறங்கியிருக்கும் எமது யு. எஸ். ஏ. பவுண்டன் பேனுக்களுக்கு ஏஜண்டுகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் தேவை. மாதிரிக்கும், இலவச ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் பின்வரும் விலாசத்துக்கு எழுதவும் :—

HOUSE OF COMMERCE
74, G. B. Road, (S/T)
DELHI.

குறிப்பு :- தபால் போக்குவரத்து அனைத்தையும் ஆங்கிலத்திலேயே வைத்துக்கொள்ளவும்.

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தினகால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்
கரூர்.

J. 101 மார்க்
பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் இடையாது. முப்புவினுல் தபாசிப்பு, வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு சோவுதல் குடல் கொந்தவிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி
சித்த வைத்யசாலை
தர்மராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

Regd. No. M. 3398 SHIVAJI 6—2—49 Estd, 1935

விந்தை உலகம் ‘மூர்த்தி’

மகாபாவம்!

பூமியிலிருந்து பெட்ரோல் எடுப்பது மகத்தான பாபகாரிமாகக் கருதப்பட்டது எப்போது தெரியுமா? 1864-ல் அமெரிக்க அரசாங்கம் ஒரு உத்திரவுகூடப் போட்டதாம் அப்போது. “கடவுள் உலகத்தைக் கடைசி நாளன்று அழிப்பதற்காக பூமிக்கடியில் இந்த எண்ணையை சேமித்து வைத்திருக்கிறார். ஆகையால் அதைத்தோண்டி எடுப்பது மதவிரோதமான செயலாகும்.” எப்படி. விந்தை தானே இப்போது பெட்ரோல் இல்லாமல் உலகம் ஒரு விநாடி நடக்கமுடியாது.

ஒன்பது வருஷ விளையாட்டு

லெப்டினன்ட் கர்னல் ‘ஸைரில் போலி’ என்பவர் இங்கிலாந்திலுள்ள லீட்ஸ் என்ற ஊருக்குப்போகவேண்டி இருந்தது. அங்கு ‘பிராண்ட்’ என்ற ஒருவரை சந்தித்தார். அவர் ஒரு பாங்கின் அதிகாரி. அதோடு ‘பில்லார்ட்’ என்ற ஒருவகைச் சொக்கட்டான் ஆடுவதிலும் சமர்த்தர். ‘போலி’ அவரை அந்த விளையாட்டில் தோற்கடித்து விடுவதாகப் பந்தயம் கட்டினார். ஆனால் ‘ஸைரில்’ சேனாபதியல்லவா. ஊர்சுற்ற வேண்டியிருக்கும். அடிக்கடி ‘காம்ப்’ கிளம்பி விடுவார். சிலசமயம் வருஷக்கணக்கில் ஆளே வரமாட்டார். இதனாலெல்லாம் விளையாட்டு தடைப்பட்டது. இருந்தாலும் நேரம் கிடைத்தபோதெல்லாம் ‘பிராண்டி’ன் வீட்டுக்கு வந்து விட்டுப்போன விளையாட்டை தொடர்ந்து ஆடுவார். போகும்போது காய்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதை குறித்துக்கொண்டு போவார். மறுபடி வெகுநாள் கழித்துவந்து விளையாட்டைத் தொடர்வார். அந்தப்பலகை அப்படியே அங்கேயே வைக்கப்பட்டிருந்தது. கடைசியில் 1927-ம் வருஷம் டிசம்பர் மாதம் விளையாட்டு முடிந்தது. ‘பிராண்ட்’ தான் ஜெயித்தார்.

மதிப்பு உயர்கிறது

‘பார் அயர்ன்’ என்ற 1 பவுன் மதிப்புள்ள இரும்பு கத்தியாக செய்யப்பட்டால் 36 பவுன் மதிப்படைகிறது. ஊசியாக செய்யப்பட்டால் 70 பவுன் மதிப்படைகிறது. க்ஷவர பிளேடுகளாக செய்யப்பட்டால் 950 பவுன் மதிப்பைக்கொடுக்கிறது. அதே இரும்பு கைக்கெடியார ஸ்பிரிங்காகச் செய்யப்படும்போது 5000 பவுன் விலைக்குப் போகிறது.

பெரிய தீ விபத்து

சரித்திரப்பிரசித்தமான பெரிய தீ விபத்து இங்கிலாந்தில் ஏற்பட்டதுமல்ல. ரோமானிய மன்னன் ‘நீரோ’ ரோம் நகரைக் கொளுத்தியதுமல்ல 1871-ம் வருஷம் சிக்காகோ நகரில் ஏற்பட்ட தீ விபத்துதான் மிகப்பெரியது. இதனால் 2124 ஏகரா நிலம் பாதிக்கப்பட்டது 73 மைல் வீதிகள் நாசமாயிற்று. 17450 கட்டிடங்கள் சாம்பலாயின 100,000 ஜனங்களுக்கு வீடு இல்லாமல் செய்தது. 250 பேர் கருகினர். ஏறக்குறைய 60,000,000, பவுன் நஷ்டமேற்பட்டது.

விந்தையிலும் விந்தை

தாவர மந்திரவாதி என்று சொல்லப்படும் ‘லூதர் பர்பாங் என்ற அமெரிக்கர் ஒரு செடியில் கீழே உருளைக்கிழங்கும், மேலே தக்காளியையும், வெள்ளை பிளாக்பரி என்ற பழத்தையும் பயிர் செய்து காட்டினாராம். ஒரு செடியில் 3 வித பலன்கள்!

நீண்ட காதல் கடிதம்

இதுவரை உலகத்திலேயே வெகு நீளமானதாக எழுதப்பட்ட ஒரு காதல் கடிதம் பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது கன்னி ராணி எலிஸபெத்துக்கு அவள் அரசாங்க பிரபுக்களில் ஒருவர் எழுதியது. நெருக்கமாக எழுதப்பட்ட 40 பக்கங்களைக் கொண்ட இதில் 410,000 வார்த்தைகள் இருக்கிறதாம். அதாவது சாதாரண 300 பக்க நாவல் புத்தகத்தைப்போல ஐந்தாறு மடங்கு நீளமானது!

இதில்தான் ஒற்றுமை

ஐரோப்பியர்கள் பூனையைக் கூப்பிடுவதில்தான் ஒற்றுமையாகக் காணப்படுகின்றனர். ஐரோப்பிய மொழிகளில் எல்லாவற்றிலுமே பூனைக்கு ‘CAT’, என்ற உச்சரிப்புதான். பிரெஞ்ச் CHAT, ஸ்காண்டி நேவியன் KATT, ஜெர்மனி KATZE, ரஷ்யா KATS, ஸ்பெயின் GATO, இத்தாலி GATTO, ரோமானியர் பூனையை ‘CATUS’ என அழைத்தனர்.

வளர வளர

ஆமை பிறக்கும்போது 2½ அவுன்ஸ் எடைதான். ஆனால் முழு வளர்ச்சியடைந்த ஆமையின் நிறை 500 பவுண்டு. அதாவது பிறக்கும்போது இருந்த கனத்தைப்போல 4000 மடங்கு கனம்.

எண்ணினால் தெரியும்

வான்கோழியின் உடலில் எவ்வளவு இறகுகள் தெரியுமா இருக்கின்றன. ஆராய்ச்சியாளர் சோதனைசெய்து கண்டுபிடித்திருக்கின்றனர். 3860 இறகுகள் இருக்கிறதாம்.

அங்கும் இங்கும் “வாசுகி”

1. Schloss Eltz.
2. The Great Cask of Heidelburg
3. Neusch Wanstein.
4. TheMouse Tour Rhine.

ஜர்மனி அழகான பல ஊர்களுக்குப் பெயர்போனது. அற்புதமான கட்டிடங்களும் கோட்டைகளும் நிறைந்தது ஜர்மனி. இவைகளில் மிகப்பிரபலமானது நெஸ்வான்ஸ் டீன் (Neuschwanstein) என்ற பவேரிய ஆல்ப்ஸ் மலையில் உள்ள கோட்டைதான். இது அப்படியொன்றும் பழமையானதல்ல. கட்டி ஒரு நூற்றாண்டுதான் ஆகிறது. பவேரியாவை ஆண்ட ‘‘பைத்தியக்கார அரசன்’’ என்றுபெயரடைந்த ஒருவனால் கட்டப்பட்டது. Mad King of Bavaria இதேபோல மற்றொரு கோட்டை—ரொம்பப்பழமையானது-‘‘Schloss-Eltz’’ என்பது மோஸில் நதிக்கரையில் உள்ளது. ‘எல்ட்ஸ்’ பிரபு வம்சத்தார் கட்டிய இதன் வயது 600.

ஜர்மனியில் ஓதும் ரைன் நதிக்கரையிலுள்ள நகரக் கட்டிடங்கள் ஒவ்வொன்றுக்குமே கதை இங்கு வழங்கப்படுகிறது. உதாரணமாக ‘எலிச்சிகரம்’ (Mouse Tower) என்பது ரைன் நதியில் ஒரு பாறையில் தன்னந்தனியாகக் கட்டப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்குமுன் இந்த நாட்டில் பஞ்சம் வந்ததாம். அப்போது அங்கிருந்த ஒரு பேராசை பிடித்த பாதிரி நகரத்திலுள்ள தானியம் முழுவதையும் இந்தக் கோட்டையில் பதுக்கி வைத்துக்கொண்டு நாட்டுமக்கள் பட்டினியால் சாகும்போது இவன் மட்டும் சுகமாக உண்டு களித்து வந்தானாம். மக்கள் எவ்வளவு கெஞ்சியும் இவன் மனமிரங்கவில்லை. எலி, சுண்டெலி, பெருச்சாளி இவைகள் உணவில்லாமல் தவிக்க ஒருநாள் இவைகள் இந்தக் கோட்டையில் தானியம் நிறைய இருப்பதை அறிந்து உடனே எல்லா எலிகளும் இங்கு படையெடுத்து அவ்வளவு தானியத்தையும் அழித்ததோடு பிஷப்பையும் கபளீகரம் செய்து விட்டனவாம். சரித்திர ஆராய்ச்சியாளர் இதைக் கட்டுக்கதை என்கின்றனர். ஆனால் ஜர்மனியில் ஒவ்வொரு சிறு ஊரிலும் பெரிய பெரிய கட்டிடங்களிலும் அதைப் பற்றிய கதை என்னவோ இன்னும் சொல்லப்பட்டு வருகிறது.

ஹெய்டல்பர்க் நகரம் 17-ம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்களால் கொளுத்தப்பட்டது. இப்போது இங்குள்ள கோட்டையின் சுவர்கள்தான் மிஞ்சி இருக்கிறது. இருந்தாலும் ‘பெரிய பீப்பாய்’ ஒன்று இங்கு இருக்கிறது. இது 50,000 காலன் ஒயின் கொள்ளக்கூடியது. இதுதான் உலகிலேயே மிகப்பெரிய ஒயின் பீப்பாய். இதுகூட இந்த யுத்தத்தில் பிரெஞ்சுக்காரர்களால் பழுதுசெய்யப்பட்டது. ஆனால் இப்போது அதை பழுது பார்த்து சரி செய்து விட்டனர்.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor)